
# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 21 வியாழக்கிழமை (07-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:345

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட பெருந்தொகையான வெடிபொருள்கள் நேற்று தாளையடிக் கடற்கரையில் ஒன்றாகச் சேர்த்து அழிக்கப்பட்டபோது வானில் எழுந்த கரும் புகைமண்டலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

வெடிக்காத ஷெல்கள், பீரங்கிக் குண்டுகள், விமானக் குண்டுகள், மிதிவெடிகள், கிரனேட்டுக்கள் பொறிவெடிகள், டாங்கி எதிர்ப்புக்குண்டுகள், விமான எதிர்ப்பு ரொக்கட்டுக்கள் என்பவற்றோடு பரா வெளிச்சக்குண்டுகளும் அழிக்கப்பட்டன. வெடிபொருள்கள் அழிக்கப்பட்ட இடத்திலிருந்து 500யார் தொலைவில் நின்றவாறு 'உதயன்' படப்பிடிப்பாளர் இக்காட்சியைப் படமாக்கினார். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்) *(படம்:தேவராஜன்)*

# பெரும்தொகை வெடிபொருள்கள் நேற்று அழித்தொழிக்கப்பட்டன!

## தாளையடி கடற்கரைப் பிரதேசம் அதிர்ந்தது

யாழ்ப்பாணம்,நவ.7

பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த இரு மாத காலத்தில் மீட்கப்பட்ட 5 ஆயிரத்து 289 வெடிபொருள்கள் நேற்றுப் பிற்பகல் 2.20 மணிக்கு தாளையடிக் கடற்கரையில் வைத்து அழித்தொழிக்கப்பட்டன.

சர்வதேச மற்றும் உள்நாட்டு செய்தியாளர்கள் முன்னிலையில் - பிரிட்டிஷ், நோர்வே கண்ணிவெடி அகற்றும் நிபுணர்களின் மேற்பார்வையில் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இந்த வெடிபொருள்களை அழித்தனர்.

படையினரால் ஏவப்பட்டு, வெடிக்காத நிலையில் புதையுண்டு கிடந்த ஷெல்கள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை கடந்த 2 மாதங்களாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுத் தொண்டர்கள் மீட்டெடுத்து சேகரித்து வந்தனர். அவற்றை அழிக்கும் நிகழ்ச்சி நேற்று தாளையடி கடற்கரையில் இடம்பெற்றது.

கடற்கரையில் ஐந்து அடி ஆழமான ஐந்து குழிகள் அமைத்து அவற்றைச் சூழ மண்மூட்டைகள் அடுக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அழிக்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம்,நவ.7

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து மீட்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருள்கள் நேற்று தாளையடி கடற்கரையில் வைத்து அழிக்கப்பட்டன.

வெவ்வேறு வகையான மொத்தம் 5 ஆயிரத்து 289 வெடிபொருள்கள் அழிக்கப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

★ பி4, எம்.கே 1 ஏபி கண்ணிகள் - 2,450

★ 72 ரக ஏபி கண்ணிகள் - 1,252

★ 152 மி.மி. ஆட்லறி ஷெல்- 02

★ 122 மி.மி. ஆட்லறி ஷெல்- 17

★ 100 மி.மி. ரி-56 ஷெல் - 43

(14ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கு

# எதிர்பார்ப்புகளோடு சென்றோம் நம்பிக்கையோடு திரும்புகிறோம்

## விமானத்தில் வைத்து தமிழ்ச்செல்வன் கருத்து

கொழும்பு,நவம்பர்7

**"எதிர்பார்ப்புகளோடு தாய்லாந்துப் பேச்சுக்களுக்குப் புறப்பட்டுச் சென்றோம். அவை நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு அங்கிருந்து திரும்புகின்றோம்." - இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

தாய்லாந்திலிருந்து கொழும்பு திரும்பிக்கொண்டிருந்த சமயம் விமானத்தில் வைத்துச் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இக்கருத்தை அவருக்கு அருகே விமான இருக்கையில் அமர்ந்திருந்த புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா ஒரு சிரிப்போடு அங்கீகரித்தார்.

பாங்கொக் விமானநிலையத்தில் இருந்து "கதே பசுபிக்" விமானத்தில் தமது உறுப்பினர்கள் மூவர் சகிதம் இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் இரவு புறப்பட்டு, நேற்று 10.45 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

நேற்று முன்தினம் இரவை விமான நிலையத்துக்கு அருகில் உள்ள நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் கழித்த அவர்கள், நேற்றுக்காலை கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் புதுக்குடியிருப்பைச் சென்றடைந்தனர்.

விமானத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானப் பேச்சுக்களின் போக்குக் குறித்து திருப்தி தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத்திட்ட ஆலோசனைகள்:

# வட்டி மீதான வரி, வருமான வரி எல்லைகள் உயர்வு

கொழும்பு,நவ.7

★ ஓய்வூதியம் பெறுபவர்களும் சுயதொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் வங்கிகள்-நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் வைப்புச் செய்துள்ள பணத்துக்குக் கிடைக்கும் வட்டி மீதான வரி எல்லை 2003ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 72 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படுகிறது.

★ இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கும் பொருள்களில் கோதுமை மாவும், மசகு எண்ணெயும் தவிர்ந்த ஏனைய பொருள்களின் மீது 2 வீதம் முதல் 10 வீதம் வரையிலான தீர்வை விதிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

**மதிப்பீடு**

| | |
|---|---|
| மொத்த வருமானம் | : ரூ. [illegible],900 கோடி |
| மொத்தச் செலவீனம் | : ரூ. 64,900 கோடி |
| பற்றாக்குறை | : ரூ. 31,000 கோடி (தனியார் துறை அபிவிருத்திக்கான மேலதிக கடன் வழங்கலையும் சேர்த்து. |

## அரசினதும் சமாதான முயற்சியினதும் ஓராண்டு:

# டிசெம்பர் மாதம் முழுவதும் கொண்டாட அரசு ஏற்பாடு

கொழும்பு,நவ.7

ஐ.தே.முன்னணி அரசுக்கும் சமாதான முயற்சிக்கும் ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு விழா கொண்டாடுவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. மேல்மாகாணத்தில் டிசெம்பர் மாதம் முழுவதும் இக்கொண்டாட்டம் நடைபெறும்.

20 ஆண்டுகளாக யுத்தத்தினால் அவதிப்பட்ட மக்களுக்கு சமாதானம் நிலவும் காலகட்டத்தில் மகிழ்ச்சியுடைய டிசெம்பர் மாதத்தை ஒதுக்குவதாக உள்துறை அமைச்சர் ஜோன்

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாளைய பேரணிக்கு விரிவான ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

கொழும்பு மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேபிரபாகரனுக்கு இருநூறு ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து யாழ். நகரில் நாளை நடைபெறவிருக்கும் மாபெரும் கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை பொது அமைப்புக்களின் ஒன்றியம் பூர்த்திசெய்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த ஆண்டு திட்டங்களுக்கு அடித்தளம் மட்டுமே பட்ஜட்டில்!

## மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த சம்பள உயர்வு, விலைக்குறைப்பு எதுவுமில்லை

கொழும்பு,நவ.7

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 'பட்ஜட்டில்' அதாவது வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த சம்பள உயர்வு, பொருள்களின் விலைக் குறைப்பு அறிவிப்பு எதுவும் இல்லை.

சமாதானம், பொருளாதாரம், மக்கள் நலன்பேணும் அடுத்த ஆண்டுத் திட்டங்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் அடித்தளம் இடப்பட்டிருக்கிறது என்று நிதியமைச்சரின் உரை சுட்டிக்காட்டியது.


"எமது நாட்டிற்கு கண்டிப்பாகத் தேவைப்படும் சமாதானத்துக்கும் பொருளாதார வளத்திற்குமான அத்திவாரங்களை இடுவதற்கு இந்த வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் ஆண்டில எமது வேலையை மேற்கொள்வதறகு வழி சமைக்கின்றது.


"இந்த வரவு - செலவுத் திட்டம் ஊடாக நாம் சாத்தியமான அதி


(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்










கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு (MAG) நிபுணர் டொன், மனித நேயக கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பொறுப்பாளர் யோகன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரமுகர் லோறன்ஸ் ஆகியோர்....

தாளையடிக் கடற்கரையில் நேற்று வெடிப் பொருள்கள் அழித்தொழிக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படங்களை இங்கே காண்கிறீர்கள். *(படங்கள் : தேவராஜன்)*



மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தொண்டர்கள்.



# பிரபா மீதான தண்டனையை எதிர்த்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டப் பேரணி

மட்டக்களப்பு,நவ.7

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட 200 வருட கடுழியச் சிறைத்தண்டனையை ரத்துச் செய்யக் கோரி நேற்று மட்டக்களப்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

காலை 9.30 மணியளவில் மட்டக்களப்பு இந்துகல்லூரி மைதானத்தில் இருந்து புறப்பட்டன பேரணி, 10.15 மணியளவில் காந்தி சதுக்கத்தை அடைந்தது. மட்டக்களப்பு - அம்பாறை அபிவிருத்திக் குழு ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்த இப் பேரணியில், மாணவர்கள், பொதுமக்கள் என ஐயாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

"எமது தேசிய தலைவருக்கு விதிக்கப்பட்ட 200 வருட கடுழியச் சிறைத்தண்டனையை ரத்துச்செய்" "கடந்த காலங்களில் படைகள் செய்த படுகொலைகளுக்கு என்ன தண்டனை?"

"கடந்த காலப் படுகொலைகளுக்கு 2000ஆயிரம் வருடம் சிறைத் தண்டனை வழங்கு!" எனக் குறிப்பிடப்பட்ட பதாகைகள் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தாங்கிச் சென்றனர்.

காந்தி சதுக்கத்தில் 10.30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பாலசுந்தரம் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. ஆரையம்பதி அபிவிருத்திக் குழுத் தலைவர் புனிதசுந்தரம், திருப்பளுகாமம் அபிவிருத்திக் குழுத் தலைவர் தணிகாசலம், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தவிசாளர் ராஜன் சத்தியமூர்த்தி, மட்டக்களப்பு அபிவிருத்திக் குழுத் தலைவர் கே.தியாகராஜா ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

கூட்டத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் பிரதமருக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனாக இன்று சமாதானம் ஏற்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்கள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நடத்தப்படுகையில் அவற்றைக் குழப்பும் முகமாக இத்தண்டனை அமைந்துள்ளது. அத்துடன் சமாதானத்தைக் குழப்பும் சக்திகளுக்கு இத்தீர்வு வாய்ப்பாகவும் அமைந்துவிடும். தாங்கள் இதனை உடனடியாகக் கவனத்தில் எடுத்து தீர்ப்பை ரத்துச்செய்யவேண்டும் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

## தலதா மாளிகையின் 'ராஜா' யானை மரணம்

கண்டி தலதா மாளிகையின் புனித சின்னத்தை பெரஹராவில் தாங்கிச் செல்லும் 'ஹெய்யந்துடுவ ராஜா' என்னும் கொம்பன் யானை நேற்றுக் காலை மரணமானது. சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இந்த யானைக்கு 70வயது. 1995ஆம் ஆண்டு முதல் புனித சின்னத்தை இந்த யானையே பெரஹராவில் தாங்கிவந்தது.(ஐ-4)

## தென்மராட்சியில் மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி,நவ.7

தென்தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 640குடும்பங்களுக்கான 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நாளை தொடக்கம் வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களிடம் அதற்குரிய வவுச்சர்களில் நேற்றுத் தொடக்கம் பிரதேசசெயலகத்தில் வைத்து கையொப்பம் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# சைக்கிள்களுக்கு இல. தகடுகள் வழங்கும் நடவடிக்கை நேற்று

மாநகர சபையின் வருமான வரிப் பகுதியினரால் நேற்று யாழ். நகரின் இரு இடங்களில் வைத்து இலக்கத் தகடுகள் இல்லாத சைக்கிள்களுக்கு இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டன.

நகருக்குள் பிரவேசிக்கும் சைக்கிள்களிலும் நகரிலிருந்து வெளியேறும் சைக்கிள்களிலும் இலக்கத்தகடுகள் இல்லாத சைக்கிள்களுக்கு ஒரு தகடு 5 ரூபாவிற்கு விநியோகிக்கப்பட்டதுடன் தண்டப்பணமாக 50 சதமும் மேலதிகமாக அறிவிடப்பட்டது.

யாழ். ஆரியகுளம் சந்தி மற்றும் தட்டாதெருச் சந்தி ஆகிய இரு இடங்களிலேயே இந்த நடவடிக்கை இடம்பெற்றது. இது தொடர்ந்தும் இடம்பெறும் என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர்களின் நன்மைகருதி இந்த இலக்கத்தகடுகள் ஏற்கனவே சில பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தாகவும் -

அவ்வாறு கிடைக்கப்பெறாத பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பன அலுவலக நேரத்தில் மாநகர சபை அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கத் தகட்டைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றை தமது சைக்கிள்களில் பொருத்த வேண்டும் எனவும் அவ்வாறு பொருத்தியிருக்காது விட்டால் வீண் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை

இலக்கத் தகட்டை பெற்றுக் கொண்டு 5ரூபா 50 சதத்துக்குப் பதிலாக தாள் நாணயங்களை கொடுத்த பலருக்கு சில்லறை இல்லை என்ற காரணத்தைக் காட்டி மிகுதிப்பணம் சரியாக வழங்கப்படவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-17)

## ஐ.நா. செயலாளர் தீர்வு குறித்து நம்பிக்கை

ஐ.நா.நவ.7

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்து தான் உற்சாகமடைந்திருப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்திருக்கிறார்.

மேலும் நடைபெறும் பேச்சுக்கள் இலங்கைத் தகராறுக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும் என்று ஐ.நா.செயலாளர் நம்புகிறார் என்று அவரது பேச்சாளர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.(ஐ-4)

# பிரான்ஸ் ரயிலில் தீ விபத்து 12 பேர் கருகி மாண்டனர்!



பாரிஸ்,நவ.7

பிரான்ஸின் கிழக்குப் பகுதி நகரம் ஒன்றில் இரவு ரயில் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், அதில் பயணஞ் செய்த 12 பேர் கருகி மாண்டனர்; மேலும் 9 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

உயிரிழந்தவர்களில் 6 ஆண்களும் 5 பெண்களும் ஒரு குழந்தையும் அடங்குவர். திடீரெனப் பற்றிய தீயினால் ரயிலின் முதலிரு பெட்டிகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. தூங்கும் வசதிகொண்ட அந்தப் பெட்டிகளில் பயணஞ்செய்தவர்களே உடல் கருகி மாண்டனர்.

ரயில் நான்ஸி என்ற இடத்தில் உள்ள ரயில் நிலையத்தைத் தாண்டிச் சென்றபோது அங்குள்ள ஊழியர்கள் ரயிலில் தீப்பிடித்திருப்பதைக் கண்டுபிடித்தனர். உடனடியாக ரயில நகருக்கு கொஞ்சம் வெளியே நிறுத்தப்பட்டது. மீட்புப் பணியாளர்கள் விரைந்து செயற்பட்டு, தீ மற்றைய பெட்டிகளுக்கும் பரவாமல் தடுத்தனர்.

"மீட்புப் பணியாளர்கள், தீப்பற்றி எரிந்த முதலாவது பெட்டியைத் திறந்த போது அதற்குள் இருந்து கருகிய 12 சடலங்களையே கண்டனர்" - என்றார் உள்ளூர் அதிகாரி ஒருவர்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களில் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, அமெரிக்க நாட்டவர்கள் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் இடம்பெற்றபோது 150 பயணிகள் ரயிலில் இருந்துள்ளனர்.

பிரான்ஸ் போக்குவரத்து அமைச்சர் கில்ஸ் டி ரொபின் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் விஜயம் செய்து நிலைமையைப் பார்வையிட்டார். (ம)

# கொரியக்குடாவின் பாதுகாப்பு; அமெ.அதிகாரி சியோலில் பேச்சு

வடகொரியா அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது என்று வெளியான செய்திகளை அடுத்து கொரியக்குடாவின் பாதுகாப்புத் தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் டக்ளஸ் பீத் தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள உயர் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

டக்ளஸ் பீத் ஏற்கனவே ஜப்பானியத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

வடகொரியா அணுஆயுதத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தே இரு நாட்டுத் தலைவர்களுடனும் அவர் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு தென்கொரியாவுக்கு வந்துள்ள பீத், நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அமெரிக்கா - தென்கொரியா இடையேயான பாதுகாப்புத் தொடர்பான பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதும் டக்ளஸின் இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. இது வழமையானதும் கூட என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வருட பேச்சுக்களில் தீவிரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் போர் மற்றும் ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து கொண்டிருக்கும் அமெரிக்க இராணுவ நடவடிக்கை போன்ற விடயங்கள் முக்கியமாக ஆராயப்படவுள்ளன. (ம)

# நாடாளுமன்றத்தைக் கலைத்தார் இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன்

## ஜனவரியில் புதிய தேர்தல்

ஜெருசலேம்,நவ.7

இஸ்ரேல் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாகப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

ஏரியல் ஷெரோன் தன் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வென்றிருந்தாலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அவருக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இந்நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக ஷெரோன் அறிவித்துள்ளார்.



ஷெரோன் தலைமையிலான கூட்டணி அரசில் கடந்த வாரம் விரிசல் ஏற்பட்டது. பலஸ்தீன எல்லையோரத்தில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்புத் திட்டத்துக்கு ஷெரோன் அரசு அதிக நிதிஒதுக்கீடு செய்ததால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக கூட்டணி அரசில் அங்கம் வகித்த தொழிற்கட்சி அரசில் இருந்து வெளியேறியது. இதனால் நாடாளுமன்றத்தில் ஷெரோன் அரசு பெரும்பான்மையை இழந்தது. மதவாதக் கட்சிகளினதும் அடிப்படைவாதக் கட்சிகளினதும் ஆதரவைப் பெற இஸ்ரேல் முயற்சித்தது எனினும் அது வெற்றியளிக்கவில்லை. இதனால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக ஷெரோன் அறிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதஇறுதியில் புதிய நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 90 நாள்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டால் போதுமானது. எனினும் ஒரு மாதம் முன்னதாகவே ஷெரோன புதிய தேர்தலை அறிவித்துள்ளார்.

### மீண்டும் ஒரு நாடகம்

# பயணிகளை திகிலடைய வைத்த பிரான்ஸின் 'கொன்கோட்' விமானம்



பாரிஸ்,நவ.7

பிரான்ஸின் புகழ்பெற்ற அதிவேக விமானமான 'கொன்கோட்' பயணிகள் மத்தியில் மீண்டும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. மிக உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகத் திடீரென 22 ஆயிரம் அடி கீழ் நோக்கி இறங்கியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்து பிரான்ஸ் தலைநகரான பாரிஸ் நோக்கிப் பறந்துகொண்டிருந்த ஏயர் பிரான்ஸ் நிறுவனத்தின் 'கொன்கோட்' விமானமே இந்த விபத்தில் சிக்கியது. எனினும் பயணிகளுக்கு எந்தவிதக் காயங்களும் ஏற்படவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், 109 பயணிகளுடன் புறப்பட்ட 'கொன்கோட்' விமானம் ஒன்று புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து நொறுங்கியது. இந்தச் சம்பவத்தில் அதில் பயணம் செய்த அனைவரும் கீழே தரையில் நின்றிருந்த நால்வரும் உயிரிழந்தனர்.

இந்தப் பயங்கரச் சம்பவத்துக்குப் பின்னர் சிறிது காலம் 'கொன்கோட்' விமானங்களின் பறப்பு உலகெங்கும் தடைசெய்யப்பட்டிருந்தது. பின்னர் பல மாற்றங்கள் மற்றும் பரிசோதனைகளின் பின்னர் மீண்டும் இந்த விமானம் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் 'கொன்கோட்' விமானம் இப்போது மீண்டும் கோளாறில் சிக்கியுள்ளது; பயணிகளைப் பயமுறுத்தியுள்ளது.

கடந்த திங்களன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 56 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகத் திடீரென 33ஆயிரம் அடி உயரத்துக்கு கீழ் நோக்கி இறங்கியது. ஆனால், விமானி தனது சமயோசிதமான நடவடிக்கைகளால் விமானத்தைத் தொடர்ந்து செலுத்தி திட்டமிட்டபடி விமானநிலையத்தில் தரையிறக்கினார்.

"திடீரென பெரியதொரு எதிரலை (Bump) உணர்ந்தேன். விமானத்திலேயே என் வாழ்க்கை முடிந்துவிட்டது என்று எண்ணிவேன்" - என்றார் விமானத்தில் பயணம் செய்த பெல்ஜியம் நாட்டவரான அப் பெல்கஸம்.

"பெண்கள் அழ ஆரம்பித்தனர். குழந்தைகள் அலறினர்; மொத்தத்தில் அனைவருமே திகிலடைந்தனர். தொடர்ந்து விமானி எங்களுக்கு அறிவித்தார், விமானத்தின் இயந்திரம் ஒன்று பழுதடைந்துவிட்டதாக" - என்றார் அவர். இந்த விபத்துத் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### ஈராக் ஆயுதக் கண்காணிப்பு விவகாரம்:

# அமெரிக்காவின் பிரேரணை மீது 3 ஆவது தடவையாக விவாதம்

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நேற்று ஆரம்பம்



நியூயோர்க்,நவ.7

ஈராக்குக்கு ஆயுதக் கண்காணிப்பாளர்களை அனுப்புவது தொடர்பான புதிய பிரேரணை மீது மூன்றாவது தடவையாக ஐநா. பாதுகாப்புச் சபையில் நேற்று விவாதம் ஆரம்பமானது. இன்றும் அது தொடர்ந்து நடைபெறும்.

இந்த விவாதம் தமக்கு சாதகமாக இருக்கும் என்று எண்ணுவதாக ஐநா.வுக்கான அமெரிக்கத் தூதுவர், நேற்று விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கும்போது கூறினார். இம்முறை போதிய அளவு ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தப் புதிய பிரேரணையில் முக்கிய சில விடயங்கள் மாற்றப்பட்டிருந்தால் பிரான்ஸ் மற்றும் ரஷ்யா அதனை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் மூன்றாவது வரைபாகும். ஏற்கனவே அமெரிக்கா தயாரித்த இரு வரைபுகளுக்கும் சீனா, ரஷ்யா மற்றும் பிரான்ஸிடமிருந்து கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இதனால் அந்தப் பிரேரணை வரைபுகளை பாதுகாப்புச் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற அமெரிக்காவால் முடியாமல் போய்விட்டது.

அதனாலேயே, தற்போது மூன்றாவது வரைபை அமெரிக்கா விவாதத்துக்குச் சமர்ப்பித்துள்ளது.

அமெரிக்கா சமர்ப்பித்த முன்னைய வரைபுகளில், ஆயுதக் கண்காணிப்பாளர்களின் பணிக்கு ஈராக் நிபந்தனை விதித்தால் அல்லது இடையூறு விளைவித்தால் உடனடியாக ஈராக் மீது தாக்குதல் நடத்த ஐநா. அனுமதி வழங்க வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்திருந்தது. ஆனால், இந்த முக்கிய விடயத்தை பிரேரணையில் இருந்து அகற்றும்படி பிரான்ஸ் மற்றும் ரஷ்யா கோருகின்றன.

இந்த விடயங்கள் தொடர்பான திருத்தங்களுடனேயே அமெரிக்கா புதிய வரைபைத் தயாரித்துள்ளது. இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் இந்த பிரேரணை தொடர்பாக ஐநா. பாதுகாப்புச் சபை இறுதி முடிவை மேற்கொள்ளும்.

பாதுகாப்புச் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டால், அன்றிலிருந்து 30 நாள்களில் ஆயுதக்கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் தமது பணியைத் தொடங்குவர்.

அமெரிக்காவின் கெட்ட நோக்கங்களுக்கு இடமளிக்காத ஐ.நாவின் ஆயுதக்குறைப்புத் தீர்மானத்தை ஈராக் ஏற்கும் என்று அதிபர் சதாம் ஹுசைன தெரிவித்துள்ளார். அவரது கருத்தை ரஷ்யா வரவேற்றுள்ளது. (ம)

# அமெரிக்கப்படைகள் குவிப்பு!

லண்டன்,நவ.7

ஈராக்கில் ஆயுதக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஐநா. பாதுகாப்புச் சபையில் பெரும் இழுபறிகளுக்கு மத்தியில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் ஈராக்கைத் தாக்கும் தனது திட்டத்தின் ஒரு பகுதியாக அந்த நாட்டைச் சுற்றியுள்ள தனது தளங்களில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்து வருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஈராக்கை அண்டிய பகுதிகளில் உள்ள அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 50ஆயிரமாக உயர்ந்துள்ளது. சுமார் 400 விமானங்கள் தாக்குதலுக்குத் தயாரான நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பல்கள் பலவும் அவற்றின் கட்டளையின் கீழ் இயங்கும் கடற்கலங்களும் வளைகுடாக் கடலை நோக்கி நகர்ந்துள்ளன; நகர்ந்துகொண்டிருக்கின்றன. (ம)

### பாகிஸ்தானின் வடக்கு மலைக்கிராமங்களில்

# நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவிகள் விரைவு

இஸ்லாமாபாத்,நவ.7

பாகிஸ்தானில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளுக்கு அவசர உதவிகள் விரைந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் பாகிஸ்தானின் வடக்கு பகுதிக் கிராமங்கள் நிலநடுக்கத்தால பாதிக்கப்பட்டன. இதனால் குறைந்தது 17பேர் உயிரிழந்தனர்; 65இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வடக்கு நகரான கில்கிட்டுக்கு கிழக்கே சுமார் 50கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மலைப்பகுதிக் கிராமங்களே நிலநடுக்கத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. ரிச்டர் அளவு கோலில் 5.6 புள்ளிவரை இந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. ஞாயிறு இரவு முழுவதும் சிறுசிறு அதிர்வுகள் தொடர்ந்ததாகவும் கூறப்பட்டது.

கடும் குளிர் நிலவும் இந்தப் பகுதிகளில் நிலநடுக்கத்தால் வீடுகளை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் உணவின்றி தவிக்கின்றனர். அவர்களுக்கு உடனடியாக அதிகாரிகளால் தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்குரிய பிளாஸ்ரிக் விரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து உணவு மற்றும் உதவிப் பொருள்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

டையமர் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் ஒரு வீடு இடிந்து வீழ்ந்து அதில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேர் உயிரிழந்தனர்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக இப்பகுதிகளுக்குச் செல்லும் பிரதான கரகோரம் நெடுஞ்சாலை தடைப்பட்டுள்ளது. ஆனால், அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதையின் ஒரு பகுதியை போக்குவரத்துக்குத் தயார் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவிப் பொருள்கள் செல்வதற்கு வழிவகுத்துள்ளனர். (ம)




பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவிப் பொருள்களுடன் விரையும் ட்ரக்குகள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய டோமன் பிஞ்சர் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 6/1, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொடர்புகொள்ள வேண்டிய நேரம்: காலை 11.00 மணி - 12.30 மணி வரை, மாலை 4.30 மணி - 5.30 மணி வரை.(10320)

124...இலக்கமுள்ள யமகா V-50 ரக மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசநாயகம், இல.02, மொடேன் மார்க்கட், கண்டிவீதி, சாவகச்சேரி. (10323)

### கடை விற்பனைக்கு

மின்சார நிலைய வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிக்கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.128, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10138)

### காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு நரசிம்ம வைரவ கோயிலுக்கு அருகில் உள்ள காணி (10பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தங்கமலர் இரத்தினசபாபதி, மே/பா மகேஸ்வரி, பாலசிங்கம், மாலியவத்தை, சங்கானை. (10245)

### மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் இந்துக் குடும்பத்தில் 1972 இல் பிறந்த, கேட்டை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு அதே மதத்தைச் சேர்ந்த படித்த, பண்பான குடும்பத்தில் பிறந்த, பொருத்தமான 26 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: 021-222 3848 (10266)

### திருமண சேவை

71ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றம் அற்ற M.B.A. படித்த London இல் உள்ள பெண்ணிற்கு சமகல்வியுடன் London இல் வதிவிட உரிமையுடைய மணமகன் தேவை. உத்தியோகம் பார்க்கும் மணமகன்கள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10344)

### தவறிவிட்டது

ஏழாலை மேற்கு சுன்னாகத்தை சேர்ந்த சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் என்பவரின் தேசிய அடையாள அட்டை (360702812X) யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பேருந்து நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Mr.S. வைத்தீஸ்வரன் இல.462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் கொடுத்து உதவவும். (10335)

### காணி தேவை

சாவகச்சேரி நுணாவில் கிழக்கிற்கும் சாவகச்சேரி சந்தைக்குமிடையில் கண்டிவீதியை முகப்பாகக் கொண்ட அண்ணளவாக நிலப்பரப்பு மூன்று (03) விஸ்தீரணமான வெற்றுக காணி விலைக்குத் தேவை. தகுந்த விலை வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1694, மே/பா உதயன். (10351)

# அரசு - புலிகள் பேச்சில் தமிழர்களின் திருப்திதான் முஸ்லிம்களின் வெற்றி!

## புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன

அரசை ஆதரிக்கும் முஸ்லிம் தலைவர்கள் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்பாட்டை எட்டியுள்ளனர். அவர்கள் இதனையொரு வெற்றியாகச் சித்திரிக்கின்றனர். ஆனால், அரசுடன் நடத்தும் பேச்சுக்களில் முன்னேற்றம் குறித்து தமிழ்மக்கள் திருப்தி அடைந்தாலே முஸ்லிம் தலைவர்கள் அதனை ஒரு வெற்றியாகக் கொள்ளலாம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சு அரசுக்குப் பூரண திருப்தி அளித்துள்ளது. அரசின் தேவைகளுக்கு நிதியுதவி பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான முடிவினை எட்டுவதே தமது நோக்கம் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். உண்மையில் மேற்கு நாடுகளின் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் பிச்சாபாத்திரம் ஏந்தும் பணியில் விடுதலைப் புலிகள் கனிஷ்ட பங்காளிகள் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதற்குக் கைம்மாறாகக் கிடைத்தவை என்ன?

கூட்டுச் செயலணி என முன்பு உத்தேசிக்கப்பட்டிருந்த அமைப்புக்குப் பதிலாக 'அவசரமான புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் ஆகியவற்றுக்கான உபகுழு' அடங்கலாக சில குழுக்கள் தான் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் எவ்வாறு ஒத்திசைவாக - உருப்படியாகச் செயற்படப் போகின்றன என்று தெரியவில்லை.

சமாதான உடன்பாடுகள் தொடர்பாக தற்போதுள்ள நிச்சயமற்ற நிலையில் இடைக்கால நிர்வாகத் திட்டமும் பின்தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை 'சிஹல உறுமய' கட்சிக்குத்தான் திருப்தியளிக்கும்.

அரசை ஆதரிக்கும் முஸ்லீம் தலைவர்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டியுள்ளனர். அவர்கள் இதனை ஒரு வெற்றியாகச் சித்திரிக்கின்றனர். அரசுடன் நடத்தும் பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றி தமிழ் மக்கள் திருப்திப்பட்டாலேயே முஸ்லிம் தலைவர்கள் இதனை ஒரு வெற்றியாகக் கொள்ளலாம்.

அரசும் அதன் தலைவர்களும் தமது காலைவாரத் தலைப்படுகின்றனர் எனத் தமிழ்மக்கள் கருத இடமுண்டு என்பதால், வரப்போகும் படுசிக்கலான நிலையைப் பிரபாகரனாலும் தீர்க்கமுடியாது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கையில் இறங்கவேண்டும். அத்தோடு முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வு உள்ளடக்கப்படவேண்டும். இதனை விடுத்து ரணில் அரசு சுரண்டிக்கொண்டேயிருக்கும் உலக முதலாளித்துவத்தின் நலன்காக்கும் கருவியாகச் செயற்படக்கூடாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,நவ.7

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்பாள ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.38 மணி தொடக்கம் நண்பகல் 12.18 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ம-10)

# செஞ்சிலுவைச் சர்வதேச ஊழியர்கள் உண்ணாவிரதம்

தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நியாயமான நஷ்டஈட்டைப் பெற்றுத் தரும்படி கோரி செஞ்சிலுவைச் சர்வதேசச் சங்கத்தின் இரண்டு ஊழியர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள சங்கத் தலைமை அலுவலகத்தின் கூரைமீது ஏறி இவர்கள் இருவரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கடந்த பன்னிரண்டு வருடங்களாகச் செஞ்சிலுவைச் சர்வதேச சங்கத்தில் பணியாற்றி வந்த இவர்கள் இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். (ம)

# மாளிகாவத்தை வன்முறைகளில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

கொழும்பு,நவ.7

மாளிகாவத்தையில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்கப்படும் என்று கொழும்புப் பிரதேச செயலாளர் ஜி.ஏ.ஜி.சில்வஸ்ரார் தெரிவித்தார்.

செயலகத்தைச் சேர்ந்த சமூக சேவை உத்தியோகத்தர் நயினசந்திர தெரிவிக்கையில்:-

145 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன; 277 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன - என்றார்.

அதிகார சபையின் தீர்மானங்களுக்கு அமைவாக இழப்பீடுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என்று புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் ஏ.எச்.எச்.சல்மான் கூறினார்.

இலங்கையில் பிரதான பொருளாதார நகரமான கொழும்பில் சமூகங்களுக்கு இடையே பிளவு ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல என்றும் அவர் மேலும் சொன்னார். (ம)

# தமிழினம் சமாதானத்தை விரும்புகிறது; பிரார்த்தனைகள் அதனை நிரூபிக்கின்றன!

## ஆனந்தசங்கரி எம்.பி. உரை

தமிழினம் சமாதானத்தையே விரும்பி நிற்கிறது என்ற உண்மையை சமாதான பக்தி எழுச்சிப் பிரார்த்தனை நிரூபிக்கிறது.

- இவ்வாறு யாழ். இந்து சமயப் பேரவை தீபாவளித் தினத்தன்று நடத்திய பக்தி எழுச்சிப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதங்கள் இடையே போட்டி ஏற்படுவதால் பலநாடுகளில் அமைதி இன்மை காணப்படுகின்றது. அனேகமா மதத்தீவிரவாதிகள் உலகில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

எமது அயல் நாடான இந்தியாவிற்கூட இந்துத்துவ தீவிரவாதம் வளர்ந்துவருகின்றது. ஆனால்,எமது மண்ணில் அத்தகைய போக்கைக் காணமுடியாது. இங்குள்ள இந்துக்கள் சாத்வீகப் போக்குள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். சமாதானம மலரவேண்டும் என்பதற்காகப் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனைக் காண்கின்றபோது நாம் பெருமையடையாதிருக்கமுடியாதுள்ளது. அரசும், புலிகளும் நடத்தும் பேச்சு பூரண வெற்றி பெறவேண்டும். அந்த வெற்றியில்தான் எமது எதிர்கால சமூகத்தின் நல்வாழ்வு தங்கியுள்ளது - என்றார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:-

"அரசும் - புலிகளும் நடத்தும் பேச்சு எப்படி முடியுமென எமக்குத் தெரியாது. ஆனால், அந்தப் பேச்சு முழுமைபெற வேண்டும் என்பதற்காகப் பிரார்த்திப்பதே எமது தார்மீகக் கடமையாகும். அரசு சமாதானம் பற்றி ஒருபுறம் பேசிக்கொண்டு எமது பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டு வருகிறது. எமது பிரதேசத்தில் நாம் சுதந்திரமாக நடமாட முடியாது இருக்கிறோம். அரசு சமாதானத்தை உண்மையாக விரும்புமானால் தமிழ்ப்பிரதேசத்தில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும்" - என்றார். (ஓ)


இதோ
யாழ்ப்பாணக் கல்லூரியில்
மீண்டும்
CIMA

'இது ஒரு கடவுச் சீட்டு உலக வாய்ப்புக்களுக்கு'

- தகுதியும் திறமையும் வாய்ந்த கல்வியாளர்களின் விரிவுரைகள் (தலைநகரின் புகழ்பெற்ற விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணத்தில் விரிவுரைகளை வழங்குவர்.)
- பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதிவு செய்யத் தேவையான கல்வித் தகைமைகள்

- G.C.E. - O/L கணிதம், ஆங்கிலம் உட்பட 3 திறமைச்சித்திகளும்
  G.C.E. - A/L இரண்டு திறமைச்சித்திகள் அல்லது ஒரு திறமைச் சித்தியுடன் பொது அறிவுப் பரீட்சையில் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட புள்ளிகள்.
- அடித்தள நிலைக்கு விலக்களிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டங்கள்
  1.BCom 2. BA

வகுப்புகள் டிசெம்பர் முதல் வாரத்தில் ஆரம்பம்
பதிவுகளை நவம்பர் 25இற்கு முன் மேற்கொள்ள வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு
Director:
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464, Hospital Road,
Jaffna.
(சி24371)



பதவி வெற்றிடம்
Medical Representative

கொழும்பில் இயங்கும் தனியார் மருந்து இறக்குமதி நிறுவனமொன்றுக்கு யாழ்.மாவட்டத்தில 'Medical Representative' ஆகப் பணிபுரிய ஒருவர் உடன் தேவை.

G.C.E.A/L கல்வித் தகைமையுடன் ஆங்கில அறிவு இன்றியமையாதது. அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். வயதெல்லை கிடையாது. நேர்முகப் பரீட்சை 10-11-2002 (Sunday) நடைபெற இருப்பதால் உடன் தொடர்பு கொள்ள வேண்டியது:

JAGAN PHARMACY
462/B, Hospital Road, Jaffna. Tel: 021-222 3191
அல்லது
ARKEM - Colombo.
Tel: 01-470290, 071-341956 (C/24733)



கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள் அவர்களின் அன்புத் துணைவி

திருமதி குகதாஸக் குருக்கள் நாகலட்சுமி அம்மா

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறும் நாம், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீசாயி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்.
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.
(10343)

உதயன்

## இன்னும் தடை ஏனோ?

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் காணப்பட்ட முன்னேற்றம் குறித்து அமெரிக்காவும் பிரிட்டனும் வரவேற்புத் தெரிவித்துள்ளன. இலங்கைக்கு உதவும் நாடுகளில் முன்னணியில் இருக்கும் ஜப்பானும் கூட இதே போன்ற கருத்தை வெளியிட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதில் அரசும், புலிகளும் வெளிப்படுத்திவரும் உறுதிப்பாட்டை அமெரிக்காவும், பிரிட்டனும் பாராட்டியும் இருக்கின்றன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகவிருக்கின்றது. அந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு தாங்கள் மிகவும் ஆவலோடு காத்திருப்பதாகவும் இந்த இரு நாடுகளும் அறிவித்திருப்பதும் முக்கிய விடயமாகின்றது.

பிரிட்டனும் அமெரிக்காவும் தெரிவித்துள்ள இந்தப் பாராட்டுகளும், உதவும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றுவதில் தாம் உறுதியாக இருப்பது குறித்து விடுத்த அறிவிப்பும் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தியுள்ளன; சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் மேலும் ஊக்கப்படுத்தி, சமாதான நிலைப்பாட்டில் மேலும் பற்றி நிற்க அழுத்தம் கொடுத்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ள வெளிநாடுகளில் பிரிட்டனும், அமெரிக்காவும் முக்கியமானவை.

தத்தமது நாடுகளில் புலிகளுக்கு ஆதரவாக நிதி திரட்டுவதைத் தடைசெய்து, அப்படி நிதி திரட்டினால் கடும் தண்டனை விதிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளையும் அவை செய்துள்ளன.

அத்தகைய இரு நாடுகள்தான் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு சமுகந்தரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாக அறிவித்திருக்கின்றன.

இந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றி, இலங்கைக்கு - குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்குக்கு - உதவும்படி கோரி உரையாற்றுமாறு விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

அது மாத்திரமல்ல, இக்கூட்டத்தின்மூலம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கெனப் பெறப்படும் நிதியை உதவிவழங்கும் நாடொன்றில் வைப்பில் வைத்திருக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான உபகுழு அடையாளங்கண்டு தீர்மானிக்கும் திட்டங்களுக்கு இந்த நிதியிலிருந்து உரிய பணம் அந்த நாட்டினால் நேரடியாக அனுப்பிவைக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட உப குழுவில் சரி அரைப்பங்குப் பிரதிநிதித்துவத்தைப் புலிகள் கொண்டுள்ளனர்.

அதாவது புலிகளின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்படப்போகும் புனரமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான கூட்டத்தில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற புலிகளைத் தடை செய்த நாடுகள் பங்குபற்றப் போகின்றன. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணைந்து விடுக்கப்போகும் கோரிக்கையை அந்த நாட்டின் பிரதிநிதிகள் ஒரே கூட்டத்தில் அமர்ந்திருந்து செவிமடுக்கப் போகின்றனர்; அவர்களின் கோரிக்கையைப் பரிசீலிக்கப் போகின்றனர்; அந்தக் கோரிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடும் செய்யப்போகின்றனர்.

ஈழத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற காரணத்தினாலும், சமாதான முயற்சிகளில் உண்மையான ஈடுபாடுள்ளவர்கள் என்பதை நிரூபித்து வருவதனாலுமே புலிகளுக்கு இத்தகைய அங்கீகாரம் - அதுவும் அவர்களின் இயக்கத்தைத் தடை செய்த அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளால் - வழங்கப்படுகின்றது என்பது கண்கூடு.

ஒருவகையில் பார்த்தால், உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளும் பங்குபற்றுவது புலிகளின் இராஜதந்திரப் போக்குக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

புலிகளுக்கு இவ்வாறான உயர் அங்கீகாரத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ வழங்கிய பின்னரும் அவர்கள் மீதான தடையை அமெரிக்காவும், பிரிட்டனும் தொடர்ந்து வைத்திருப்பது அந்த நாடுகளின் முரண்பாடான போக்கையே காட்டி நிற்கும்.

எனவே, சமாதானப் பேச்சுகள் கனிந்துவரும் இச்சூழ்நிலையில், புலிகள் மீதான தடையை உத்தியோகபூர்வமாக நீக்குவதாக அந்த நாடுகள் அறிவித்து, அதன்மூலம் சமாதான முயற்சிப் பாதையை மேலும் பிரகாசமானதாக்கி, சிறந்த பலன் கிடைக்கச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

# மின்மானிகளை வாங்கிப் பொருத்த விரும்புவோர் எம்மை அணுகலாம்!

## மின்சாரசபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

மின் இணைப்புகளில் தாமாக மின்மானிகளை வாங்கிப் பொருத்திக்கொள்ள விரும்புவோர் மின்சார சபையுடன் தொடர்புகொள்ளலாம்.

- இவ்வாறு இலங்கை மின்சார சபையின் வடமாகாண அலுவலக உயர் அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் மின்மானி பொருத்தாத மின் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் இடையூறுகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

மின்மானி பொருத்தப்படாத மின் இணைப்பைப் பயன்படுத்தும் பாவனையாளர்கள் குறித்து மின்சாரசபை அதிகளவு கரிசனையுடன் செயற்படுகிறது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கிலேயே மின்மானிகள் பொருத்தப்பட்டுவருகின்றன. தாமாகவே மின்மானிகளைக் கொள்வனவு செய்து பொருத்திக்கொள்ள விரும்புவோர் மின்சார சபையுடன் தொடர்புகொள்ளலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்னும் 23 ஆயிரம் மின்சார பாவனையாளர்களுக்கு மின்மானிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளன. இன்னும் சில மாதங்களில் அனைத்து இணைப்புகளுக்கும் மின்மானிகள் பொருத்தப்பட்டுவிடும் என எதிர்பார்க்கலாம். அதற்கேற்ற வகையில் எமது செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

மின்மானி பொருத்தப்படாது இருப்பதை அநேக மின்பாவனையாளர்கள் விரும்புகிறார்கள் என்பதே யதார்த்த நிலையாகும். தற்போதைய கட்டண அறவீடு அவர்களுக்கு லாபகரமானதாக இருப்பதே இதற்குக் காரணம். எனினும், சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் இதனால் பாதிப்படையலாம். இப்பிரச்சினையை சுமுகமான வகையில் கையாள்வது குறித்து தற்போது மின்சார சபை அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் இது தொடர்பான சபையின் உத்தியோகபூர்வ அறிவிப்பு பொதுமக்களுக்கு அறியத்தரப்படும்.

இப்படி அந்த அதிகாரி கூறினார். (ஒ-9)

# நடைபாதை வியாபாரம் இனி முனீஸ்வரன் வீதியில்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்ப்பாணம் மரக்கறிச் சந்தைப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளுக்கு மாநகரசபையினால் யாழ்.முனீஸ்வரன் வீதிப் பகுதியில் நேற்று இடங்கள் ஒதுக்கப்பட்டன.

அண்மையில் மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு தமது பெயர்களைப் பதிவுசெய்தவர்களுக்கு மட்டுமே இந்த இடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

நடைபாதை வியாபாரிகளை முனீஸ்வரன் வீதிப் பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் வியாபாரம் செய்யுமாறு மாநகர சபையினால் பல தடவைகள் அறிவிக்கப்பட்டது.

ஆயினும், அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஏதாவது சாக்குப்போக்குக்கூறி வந்ததாகவும் -

இனியும், புதிதாக ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் வியாபாரத்தில் ஈடுபடாது தொடர்ந்தும் சந்தைப் பகுதியில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - யாழ்.மேயர் செ.கந்தையன் எச்சரித்துள்ளார்.

இதேவேளை - நடைபாதையோர வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் தமது எண்ணிக்கைக்கு ஏற்ப இடங்கள் ஒதுக்கப்படவில்லை எனவும் -

தற்போதுள்ள காலநிலையில் இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள இடமானது வசதிவாய்ப்புகள் அற்ற இடம் எனவும் - வியாபாரிகள் தெரிவித்தனர். (ஒ-10-12)

# கிராம அலுவலர்களுக்கு புதிய நற்சான்றுப் புத்தகம்

வலி.வடக்கு,நவ.7

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அண்மையில் புதிய வடிவத்தில் நற்சான்றிதழ் புத்தகம் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கிராம அலுவலர்கள் நற்சான்றிதழ் தனியாகவும் வதிவிடச் சான்றிதழ் தனியாகவுமே வழங்கிவந்தார்கள்.

ஆனால், அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நற்சான்றிதழ் புத்தகத்தில் வதிவிடச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

இவ் புதிய புத்தகத்தின் மூலம் நற்சான்றிதழும் வதிவிடச் சான்றிதழும் சம காலத்தில் வழங்குவதற்கு இப் புத்தகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கிராம அலுவலர்களிடம் வதிவிடச் சான்றிதழ் புத்தகம் இருக்கவில்லை.

வதிவிடச் சான்றிதழ் வெளியார் கடைகளில் பெறப்பட்டே இதுவரை வழங்கப்பட்டு வந்தது. (ஒ-86)

# இளைஞர்களிடையே மோதல்; பெண்கள் உட்பட 6 பேர் காயம்!

## தீபாவளியன்று சம்பவம்

மல்லாகம்,நவ.7

தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு இருந்த இரு இளைஞர்குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இரு பெண்கள் உட்பட ஆறுபேர் அடித்தும் கத்தியால் குத்தியும் காயப்படுத்தப்பட்டனர்.

தீபாவளித் தினத்தன்று மல்லாகம் பகுதி இளைஞர்களுக்கும் குளமங்கால் பகுதி இளைஞர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

குளமங்கால் பகுதிக்கு வான் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களே பெண்களையும் மற்றும் ஒரு வயோதிபரையும் தாக்கிக் காயப்படுத்தினர்.

இம்மோதலைத் தொடர்ந்து அங்கு வந்த இளைஞர்கள் சிலர் மோதலில் ஈடுபட்டவர்களை அழைத்துச் சென்று வேறோர் இடத்தில் வைத்து தாக்கியதாகவும் தெரியவருகின்றது. (ஒ-85)

### நாளை

ஐப்பசி 22
வெள்ளிக்கிழமை
(08.11.2002)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 8.04 வரை.
நட்சத்திரம்: மூலம்
பின்னிரவு 2.09 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு நல்ல பெண்ணின் முழு அன்பையும் பெற்றுவிட்ட ஒருவன் பிச்சைக்காரனாக இறந்தாலும் வாழ்க்கையில் வெற்றியடைந்தவனாவான்.

# வெள்ளத்துக்குள் நின்றபடி கல்வி கற்கும் மாணவர்கள்!

## பளைப்பாடசாலைகளின் அவலநிலை

தென்மராட்சி,நவ.7

பளைப் பிரதேச பாடசாலைகளில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களுக்குள் மழை வெள்ளம் புகுந்து விடுவதால் மாணவர்கள் வகுப்பறைகளில் நின்றுகொண்டு கல்வி கற்கும் அவலநிலை காணப்படுகிறது.

பாடசாலைகளில் மாணவர் தொகைக்கேற்ப தளபாட வசதிகள் இல்லாததால் மரநிழலில் கல்வி கற்ற மாணவர்கள் மழை பெய்யும் வேளையில் தற்காலிக கொட்டகைகளில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். ஆனால், கல்வி கற்கும்போது மழை வெள்ளம் அக்கொட்டில்களுக்குள்ளும் புகுந்துகொள்வதால் நின்றவண்ணம் மாணவர்கள் கல்வி கற்க நேரிடுகிறது.

மீளக்குடியமர்ந்துவரும் மக்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை இணைப்பதாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இன்னமும் இயங்காததாலும் பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு உதவி செய்யக்கூடியநிலையில் இல்லாததாலும் மாணவர்களின் கல்விநிலை பாதிப்புக்கு உள்ளாவதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

## ஊரெழுப் பகுதியில்

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு: தட்டிக்கேட்டால் அச்சுறுத்தல்!

வலி.வடக்கு,நவ.7

ஊரெழுப் பகுதியில் நாளுக்கு நாள் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாக அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் வீடுகளுக்கு வாள், கத்தி, பொல்லுகளுடன் செல்லும் கசிப்பு உற்பத்திக் கும்பல்கள் அச்சுறுத்தல்களில் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படும் கசிப்பு உற்பத்தி சம்பந்தமாக உரிய திணைக்களங்களால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும், கசிப்பு உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-86)

# சர்வதேச நிலைமை புலிகளுக்கே சாதகம்!

## ஜே.வி.பி. பிரசாரச் செயலர்

கொழும்பு,நவ.7

நாம் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் புலிகள் இயக்கம் தமிழீழம் அமைப்பதை விரைவுபடுத்தி வருகிறது என்று ஜே.வி.பி. கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கடுவலையில் இடம்பெற்ற அக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் பிரசாரச்செயலர் விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

சகல வழிகளிலும் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான நிலைதோன்றி உள்ளமையால் தாய்நாட்டைப் பாதுகாக்கும் நம்பிக்கை மிக்க போராட்டத்தை ஜே.வி.பி. தீவிரப்படுத்தியுள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-12)

# சுதேச மிருக வைத்தியர்களின் சேவையை பயன்படுத்தத் திட்டம்

வலி.வடக்கு,நவ.7

இலங்கையில் உள்ள சுதேச மிருக வைத்தியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயுர்வேதத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுதேச மிருக வைத்தியர்கள் சம்பந்தமான விவரங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிராம அலுவலர்கள் மூலம் சேகரித்து அனுப்பிவைக்கும்படி ஆயுர்வேத வைத்திய சபை பிரதேச செயலாளர்களைக் கேட்டுள்ளது.

மிருக வைத்தியர்களுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பற்றாக்குறை காணப்படும் சூழ்நிலையிலேயே சுதேச மிருக வைத்தியர்களின் சேவையைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சுதேச மிருக வைத்தியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-86)




வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் விழிப்புலன் இழந்தோர் (வாழ்வகம்) நிலைய மாணவர்களால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. இக்கலைநிகழ்ச்சியின்போது வாழ்வக மாணவிகள் நிகழ்த்திய நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சியை முதல் படத்திலும் வாழ்வக மாணவன் கு.ஜெகதீசன் கர்நாடக இசை வழங்கிய காட்சியை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படம்: வலி.தெற்கு செய்தியாளர்)*

## மயிலந்தனைப் படுகொலை விசாரணை:

# எனக்கு எதுவுமே தெரியாது என்கின்றார் 16ஆவது எதிரி

கொழும்பு,நவ.7

அடையாள அணிவகுப்புக்கு என்னை அழைத்துவந்து அடையாளம் காட்டினார்கள். இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் நிரபராதி.

- இவ்வாறு மயிலந்தனைப் படுகொலைகள் சம்பந்தமான விசாரணையின்போது சாட்சியமளித்த 16 ஆவது எதிரியான உடயக்கோன் பண்டார நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சிறிஸ்கந்த ராஜா முன்னிலையில் இடம்பெற்றது.

1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி மயிலந்தனை கிராமத்தில் இப்படுகொலைகள் இடம்பெற்றன. புனானை இராணுவ முகாமிலுள்ள இராணுவச் சிப்பாய்கள் இப்படுகொலைகளைப் புரிந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கெதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சாட்சிகளின் விசாரணை முடிவடைந்து எதிரிகள் சாட்சியமளிக்கின்றனர்.

எதிரியான உடயக்கோன் பண்டார மேலும் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் சேர்ந்தேன். அடிப்படைப் பயிற்சிகள் முடிவடைந்த பின், 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி புனானை புகையிரத் நிலையத்திற்குள் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டு சாதாரண இராணுவச் சிப்பாயாகக் கடமையாற்றினேன்.

சம்பவம் நடந்த தினம் காலை 10 மணியளவில் புனானை இராணுவ முகாமிற்குள் சத்தம் கேட்டது. நான் அப்போது சோதனைச் சாவடியில் நின்று கொண்டிருந்தேன். மயிலந்தனை கிராமத்தில் வெடிச் சத்தம் கேட்டது.

சம்பவம் நடைபெற்ற சில தினங்களுக்குப் பின்பு அடையாள அணிவகுப்பொன்றுக்கு அழைக்கப்பட்டேன். என்னை அடையாளம் காட்டினர். எனக்கு இது குறித்து எதுவும் தெரியாது. நான் நிரபராதி.

- இவ்வாறு எதிரி தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

வழக்கின் 17ஆவது எதிரியான வில்பட்கலகெதர என்பவரும் சாட்சியமளித்தார். அடையாள அணிவகுப்பு மூலம் என்னை அடையாளம் காட்டினார்கள். இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் நிரபராதியென இவரும் தெரிவித்தார்.

18ஆம், 19ஆம், 20ஆம் எதிரிகளான பண்டா அமரசிங்க, அஜித் வேரமுன, அஜித்பண்டா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

அரச தரப்பு சட்டவாதியின் தொகுப்புரைக்காக விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஓம் சக்தி

சாவகச்சேரி

அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான பிராயச்சித்த

### அபிஷேக பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயம் தென்மராட்சியில் நடைபெற்ற வன்செயலினால் பலத்த சேதமடைந்து கடந்த 2 1/2 வருடங்களாக பூசைகளின்றி இருந்தது யாவரும் அறிந்ததே. தற்பொழுது நிலவும் அமைதிச்சூழலில் எதிர்வரும் 08.11.2002 வெள்ளிக்கிழமை நித்தியபூஜாஹீன பிராயச்சித்த அபிஷேகமும் நித்திய பூசைகளும் ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து 09.11.2002 சனிக்கிழமை மாலை கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 10.11.2002 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.38 மணிதொடக்கம் 12.18 மணிக்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகமும் நடைபெற்று திருப்பணிகள் தொடரும். அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அன்னையின் திருவருளைப் பெறுவீர்களாக.

பிரம்மஸ்ரீ ப.மகாகணபதிசர்மா
(ஆலய தர்மகர்த்தா).

(10311)

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

07-11-2002




செல்வன் பற்குணராஜா ஹரிகரன்

அம்மன் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த பற்குணராஜா - ரங்கநாயகி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

*செல்வன் ஹரிகரன்*

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.11.2002) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா மனோஜா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், அன்ரிமார், அக்காமார், நிஸாஜு அண்ணா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் சில்லையூர் முத்துமாரி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

*அம்மன் வீதி,*
*பண்டத்தரிப்பு.*

(10334)

தகவல்:-
பொ.பற்குணராஜா (அப்பா - குணம்)

### துயர் பகிர்கின்றோம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 - 04 - 1940 | 02 - 11 - 2002 |

திருமதி கதிராசி கார்த்தியேசு

*(மந்துவில் கிழக்கு, கொடிகாமம்)*

எமது சங்கப் பணியாளர் திரு.நா.பத்மநாதன் அவர்களின் தாயார் திருமதி கதிராசி கார்த்தியேசு 02.11.2002 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

*ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*கொடிகாமம்.*

(C/24730)

பணிப்பாளர், பணியாளர்கள்
அங்கத்தவர்கள்.

### கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை

க.பொ.த. (சா.தர.பரீட்சை - 2002)

மாணவருக்கான அறிவித்தல்

முதலாம் முறை க.பொ.த. (சா/த) 2002 பரீட்சைக்கு எமது பாடசாலைமூலம் விண்ணப்பித்து, வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும், 10, 11ஆம் தரத்தில் பெற்ற கணிப்பீட்டுப் புள்ளிகளை எதிர்வரும் 09.11.2002இற்கு முன்பு பாடசாலையில் ஒப்படைக்கவும். 2ஆம் தடவை பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு 14.11.2002 அன்று செய்முறை பரீட்சை பளையில் உள்ள வேம்பொடுகேணி பாடசாலையில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

- அதிபர்.

இத்தாவில், பளை.

(10329)

### மரண அறிவித்தல்

கந்தையா வேலுப்பிள்ளை

(சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி,
கனிஷ்ட பாடசாலை இளைப்பாறிய அதிபர்)

நுணாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை (வேலுப்பிள்ளை மாஸ்டர்) 04-11-2002 திங்கட்கிழமை 'பேத்' ஆஸ்திரேலியாவில் சிவபதமெய்தினார்.

அன்னார் கமலாம்பாளின் (செல்லம்மா - ஓய்வுபெற்ற ஆசிரியை, அமிர்தாம்பிகை வித்தியாசாலை) அன்புக் கணவரும் பவானி, டாக்டர் சிறீதரன், சிவகுமாரன், நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் விவேகானந்தன், பாமா, வசந்தி, டாக்டர் சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுகி, ராதா, உமா, அரன் அஞ்சலா, திவாஹரன், அரவிந்தன், அஞ்சுயனி ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ராகுல், சஹானா ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-11-2002) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**Mrs. K. Veluppillai**
*14, Minora Road,*
*Dal Keith,*
*W.A 6009, Australia.*
*T.P. 0061-8-9386-7493*

(10340)

தகவல்:
மா.ரெங்கநாதன்
(பெறாமகன்)
86 3/2, பஸல்ஸ் லேன்,
கொழும்பு -06.

## வயோதிபர் இல்லம் அமைக்க இடம்தேவை

மண்டைதீவு,நவ.7

வடமராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் முதியோர் இல்லம் ஒன்றை அமைக்க காணி தேவை என வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

பொருத்தமான காணியை இனங்கண்டு தெரிவிக்குமாறு அப்பகுதி கிராம சேவையாளர்களை அவர் கேட்டுள்ளார். (ஒ-88)

## மொழித்திறன் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.7

தீவக வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மொழித்திறன் விருத்திச் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.15 மணிவரை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் தரம் 6இல் இச்செயற்றிட்டத்தில் பங்குபற்றும் மாணவர்களுக்கு மாவட்ட மட்டத்திலான மொழிற்திறன் இறுதி மதிப்பீடு எதிர்வரும் 12ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இதனை அறிவித்துள்ளார்.(ஒ)

## ஆஸ்பத்திரியை இடமாற்ற கோரிக்கை

கோப்பாய்,நவ.7

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் இயங்கும் காசநோய் வைத்தியசாலையை மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிக்கு மாற்றி உதவக்கோரும் மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியிடம் கோப்பாய்ப் பகுதி மக்கள் கையளித்தனர்.

அம்மகஜரில் 'இவ்வைத்தியசாலைக்கு எம்.பி.பி.எஸ். தரத்திலான வைத்திய அதிகாரியை நியமிக்க வேண்டும். வைத்தியசாலைக்கு தொலைபேசி மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவேண்டும்' என்றும் கோரப்பட்டுள்ளது. (ஒ-72)

## நாவற்குழியில் வெடிபொருள்கள் அகற்றும் பணி

நாவற்குழி,நவ.7

நாவற்குழியில் அமைந்திருக்கும் உணவுக் களஞ்சியசாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருள்கள் கடந்த சில நாள்களாக மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

2000ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கைகளின்போது இப்பிரதேசத்தில் பல வெடிபொருள்கள் புதைக்கப்பட்டன. இந்த நிலையில் இப்பிரதேசத்தில் உள்நுழையும் கால்நடைகள் இவ்வெடிபொருள்கள் வெடித்ததனால் இறக்கவும் நேரிட்டது.

புல்டோசர்களின் உதவியோடு இப்பிரதேசத்தில் கடந்த சில நாள்களில் பாரிய சேதத்தை விளைவிக்கும் அமுக்கவெடிகள் இப்பிரிவினரால் அகற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்களஞ்சியசாலை மீளவும் புனரமைக்கப்பட்டு யாழ்.அரச செயலகமும், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் பயன்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மிகப் பெரிய அரச களஞ்சியசாலை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-75)

## மயான வீதியை புனரமைக்கக் கோரிக்கை

கைதடி,நவ.7

கைதடியில் உள்ள ஊறல் மயானத்திற்குச் செல்லும் வீதியை விரைவில் புனரமைத்துத் தரும்படி இப்பகுதி மக்கள் கோரிவருகின்றனர்.

மயானத்திற்கு செல்லும் வீதி பல வருடங்களாகத் திருத்தப்படவில்லை. மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் இவ்வீதி வழியாகச் சடலங்களை எடுத்துச் செல்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியை விரைவில் திருத்த தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். இம்மயானத்தை கைதடிப் பகுதியில் உள்ள நான்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-75)


# தண்ணீரிலும் நெருப்பிலும் மட்டுமே 'ஸ்கிரீன் பிரிண்டிங்' செய்யமுடியாது

'ஸ்கிரீன் பிரிண்டிங்' என்பது மிகவும் குறைந்த முதலீட்டில் ஒவ்வொருவரின் உடல் உழைப்பையும் கற்பனா சக்தியையும் பயன்படுத்தி குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து செய்யக்கூடிய ஒரு சுயதொழில். உலகில் எத்தனை வகையான பிரிண்டிங்குகள் இருந்தாலும் 'ஸ்கிறீன் பிரிண்டிங்' காண்போரைக் கவர்ந்திழுக்கும். 'ஸ்கிறீன் பிரிண்டிங்' மூலம் நீரிலும் நெருப்பிலும் மட்டுமே பிரிண்டிங் செய்யமுடியாது.

இந்தத் தொழிலைப் படித்து எந்த பரப்பிலும் பிரிண்டிங் செய்யலாம் என்பதைவிட, எந்தப் பரப்பில் பிரிண்டிங் செய்து வியாபார ரீதியாக வெற்றியடைவது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். தற்போதைய வியாபார உலகில் விளம்பர 'ஸ்டிக்கர்கள்' மிகவும் இன்றியமையாதவை. எந்த வகையான ஸ்டிக்கர் வகையையும் ஸ்கிரீன் பிரிண்டிங்மூலம் சி.டிகளில் செய்யலாம். இருப்பவை ஸ்கிரீன் பிரிண்டிங் முறையில் அச்சிடப்பட்ட படங்களே. அதுமட்டுமன்றி, கலண்டர்கள், டயறிகள், திருமண அழைப்பிதழ்கள், போஸ்டர்கள் போன்றவையும் செய்யலாம். மரம், தகரம் போன்றவற்றிலும் பிரிண்ட் செய்யலாம். துணி வகைகளில் ரி-சேட், பெனியன் உறைகள் மற்றும் எல்லா வகையான துணிகளிலும் பிரிண்ட் செய்யலாம். இன்றைய காலகட்டத்தில் ஸ்கிரீன் பிரிண்டிங் தொழிலில் புதியவகை இரசாயனங்களும் புதிய முறைகள் பலவும் அறிமுகமாகியுள்ளன. குறிப்பாக 'ஓவ் செட்' இயந்திரம் போன்று மிகவும் நேர்த்தியாக 'ஸ்கிரீன் பிரிண்ட்' மூலம் செய்யலாம்.

பொதுவாக இலங்கை போன்ற நாடுகளில் இந்தத் தொழிலை சிலரே மேற்கொண்டுள்ளனர்.

'ஸ்கிரீன் பிரிண்டிங்கை' பெண்கள் பழகினால் சாதாரண துணி வகைகளைக் கடைகளில் வாங்கி அதில் தங்களுக்குத் தேவையான



துணியில் 'ஸ்கிரீன் பிரிண்டிங்'

'டிசைன்களை' பல வர்ணங்களில் உருவாக்கலாம்.

இந்தத் தொழிலை பகுதி நேரத் தொழிலாகவும் செய்யலாம். வெளி நாடுகளில் இந்த கைவழிமூலம் செய்யும் தொழிலுக்கு மதிப்பு அதி

**ஆர்.பரதன்**

கம். வேலை வாய்ப்பும் அதிகம். இந்தத் தொழிலுக்கு படம் வரையத் தெரிய வேண்டும், கல்வி அறிவு அதிகம் வேண்டும், கம்பியூட்டர் அதிகம் படித்திருக்கவேண்டும் என்றெல்லாம் அவசியமே இல்லை. பயிற்சி மட்டும் போதுமானது. தற்போது கடதாசியிலும் துணிகளிலும் 'எம்போஸ்' செய்யும் முறை, ஒரு புகைப்படத்தைத் துணியிலோ, தாளிலோ 'ரெக்ஸினிலோ' பதிப்பிக்கும் முறை, சி.டியில் நான்கு வர்ணப்படங்களைப் பதிப்பிக்கும் முறை என பல முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தொழிலில் மொத்தமாக 9 விடயங்கள் தெரிந்திருக்கவேண்டும்.

1. 'ஸ்கிரீன்' தயார் செய்வது.
2. 'எக்ஸ்போஸிங்'
3. பிரிண்டிங் செய்தல்
4. வர்ணங்கள் கலத்தல்
5. 'ஸ்கிரீன்' கழுவுதல்
6. கைவழி முறையில் செலவின்றி வர்ணங்களை வகைப்படுத்துவது
7. 'டிசைன்' தயார் செய்தல்
8. கணனிமூலம் டிசைன் செய்தல
9. முகவர்களை கவர்வதும்




தொழிலை மேம்படுத்துவதும் ஆகியவையே அவையாகும்.

எந்த ஒரு மனிதனும் தன் தாய் மொழியில் கல்வி கற்றாலேயே புரிந்து அறிந்து வெற்றி என்னும் கனியை எளிதாக எட்டிப் பறிக்கமுடியும். இந்தத் தொழிலை இன்று மிகப்பெரிய அளவில் செய்து வருபவர்கள் உலகமெங்கும் திருமண அழைப்பிதழ்கள், டயறி, கலண்டர்களை அச்சிட்டு விநியோகிக்கின்றனர். இவர்களின் வெற்றிக்குக் காரணம் தன்னம்பிக்கையோடு உழைத்ததேயாகும். ☆

# சீன, ஜப்பானிய புராதன நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரிஷி காளான்

புராதன சீனாவில் மூலிகையின் குணம் நன்கு உணரப்பட்டிருந்தது. இங்கு 2000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட மூலிகை ஏடுகளில் 'ரிஷி' காளான் பற்றி எழுதிவைத்துள்ளார்கள்.

'ஷெனேஹ் ஹொன்சோக்யோ' எனும் ஜப்பானிய நூல் முக்கியமான மூலிகைகளாக 365 மூலிகைகளைக் குறிப்பிட்டு அவற்றை மூன்று பிரிவுகளாக்கியுள்ளது. முதல 120 மூலிகைகள் அற்புத மூலிகைகள் எனவும் - அடுத்த 120 மூலிகைகள் சராசரி மூலிகைகள் எனவும் - இறுதி 125 மூலிகைகள் மத்திம மூலிகைகள் எனவும் - இந்நூல் பட்டியல் இடுகிறது. முதல் 120 அற்புத மூலிகைகளின் பட்டியலில் 'ரிஷி காளான்' இடம்பெறுகிறது.

2000ஆண்டுகளுக்கு முன்னைய இந்தத் தரப்படுத்தல் மிகத்துல்லியமானது எனக் கூறிவைக்கக் காரணம் இருக்கிறது. ஒரு மூலிகை குறித்த சில நோய்களுக்கு நிவாரணியாக அமைந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு அநேகமாக ஒன்றுமில்லை. ஆனால், ரிஷி காளான் அப்படி அல்ல. அநேகமான எல்லா நோய்களின் உக்கிரத்தையும் தணித்து ஈற்றில் சுகப்படுத்துவதுடன் ரிஷி சத்துணவு அல்லது நிறை போஷனை உணவாகவும் உட்கொள்ளத்தக்கது. மேலும், பக்க விளைவுகள் என்ற பேச்சுக்கே இடம்கொடுக்காதது. அக்கஷிபா எனப்படும் சிவப்பு ரிஷி பற்றிய குறிப்புக்களும் அதைச் செயற்கையாக எப்படிப் பயிரிடுவது என்னும் இரகசியக் குறிப்புக்களும் மிங் அரசவம் சத்து ஆவணங்களில் உள்ளன. இக்குறிப்புக்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குரியவை.

'ரிஷி' நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டபோது 'கொலஸ்ட்ரோல்', புற்றுநோய், உளவியல் கோளாறுகள், நீரிழிவு, ஈரல் எரிவு, நரம்புத் தளர்ச்சி, உயர் இரத்த அழுத்தம், ஒவ்வாமை போன்ற முக்கிய நோய்கள் படிப்படியாகக் குணமாகின. ஒவ்வாமை நோயைக் குணப்படுத்த முடியாது எனக் கைவிடப்பட்ட நோயாளிகளில் 60 தொடக்கம் 87.7 வீதமானோர் பூரண

**பா.திரிசூலன்**

குணம் கண்டனர். 50 தொடக்கம் 80 வீதமான சந்தர்ப்பங்களில் சுவாசத் தொகுதி கோளாறுகள் தொற்றுக்கள் பூரண முன்னேற்றம் கண்டன. ரிஷி தொடர்பாக பழைய குறிப்புக்களும் சரி, நவீன ஆராய்ச்சி முடிவுகளும் சரி வற்புறுத்துவது ஒன்றே ஒன்றுதான் ரிஷிகாளான் ஒரு மருந்து அல்ல, மூலிகைத் தன்மையுடைய போசனைப் பொருள். எந்தவித நோய் அற்றவர்களும் இதனை உபயோகிக்கலாம். இதனால் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்றனர். இவர்கள் எதிர்காலத்தில் நோய்களால் தாக்கப்படும் சந்தர்ப்பங்கள் குறைவு.

பல வியக்கத்தக்க மாற்றங்களை மனித வாழ்வில் ஏற்படுத்தி ஆரோக்கியத்தை நிலைநிறுத்தும். ரிஷியின் மருத்துவத்தன்மை பண்டைக்காலத்தில் அறிந்திருந்தது ஒரு பெரிய ஆச்சரியமான விடயம். அதை விட ஆச்சரியமான விடயம் பிற்கால நலன் கருதி புராதன வைத்தியங்கள் பல குறிப்புகளை எழுதி வைத்தமை. இவை எல்லாவற்றையும் விட மிக மிக ஆச்சரியகரமான, சந்தோஷமான விடயம் ரிஷி மருத்துவ வில்லைகள, ரிஷி சாரம் அடங்கிய வேறு பல உணவுப்பொருள்கள் DXN GANDODERMA என்னும் பெயரில் இலங்கையின் விற்பனைச் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளமைதான். ✦

# இலங்கையின் இன்றைய தேவை தேர்தலா அல்லது தேசிய அரசா?

## நாட்டுநலனே முக்கியம் என்ற உணர்வு தலைவர்களுக்கு இருப்பது அவசியம்

1978ஆம் ஆண்டு ஐ.தே.மு. ஆட்சியினரால் கொண்டுவரப்பட்ட இறுக்கமான அரசியல் சட்டப்படி நாட்டின் நிர்வாகம் அனைத்தும் சர்வ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் தாரைவார்க்கப்பட்டு விட்டது.

அமைச்சர்களை அகற்றவும் நியமிக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டென அரசியல் சட்டம் கூறுகிறது.

அரசியல் சட்டப்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்க நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமல்ல - ஒட்டுமொத்தமாக இலங்கை மக்களில் பெரும்பான்மையோரின் சம்மதமும் வேண்டும்.

இந்நிலை ஐ.தே.கட்சியினருக்குப் புரியாத புதிருமல்ல. இருந்தும் தமது பலம் அறியாது அம்பலமேறி அவமானப்பட்டதுதான் இன்றைய ஆட்சியாளரின் பலவீனமாகும்.

நாடாளுமன்றத்தில் 150 பிரதிநிதிகளைத் தன்வசம் வைத்திராத எந்தக் கட்சியும் - சர்வ அதிகாரமுடைய ஜனாதிபதியோடு மோதி ஆட்சி நடத்தமுடியாது.

குறைந்த பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஜனாதிபதியோடு முட்டி மோதத் தொடங்கினால் அவர்களின் ஆட்சியின் ஆயுள் ஒரு வருடம்தான் என்பதை ஐ.தே.கட்சியே முன்னர் அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது. எதிரியிடம் பொல்லைக் கொடுத்து அடி வாங்குகிறது ஐ.தே.கட்சி.

இன்று உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை ஓரளவு அரசியல் ஞானம் படைத்த மக்கள் நன்கறிந்தார்கள். பல ஊடகங்கள் அதைச் சுட்டிக்காட்டின.

அரசியல் யாப்பில் புலியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி சொக்ஸி ஆகியோர் இருந்தும் ஐ.தே.கட்சியினர் கோடேறிக் கோட்டை விட்டிருக்கிறார்கள்.

இன்றைய ஆட்சியின் பலம் 115 நாடாளுமன்றப் பிரதிநிதிகள்.

இவர்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 12 உறுப்பினர்கள் - மலைநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு கட்சிகளிலும் 8 உறுப்பினர்கள். இந்த இரு பகுதியினரும் - தங்களுக்கு ஆபத்தென்றால் ஆட்சியை விட்டு வெளியேற என்றும் தயாராக இருப்பவர்கள்.

### அரசின் உண்மையான பலம்

மீதியிருக்கும் 95 பேரின் பலம் தான் உண்மையானது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்போதுமே தேசிய நலனைவிட தன் இனநலனைப் பெரிதாகப் பேணும் கட்சி.

ஆட்சி மாறும் நிலை ஏற்பட்டால் தம்மை மாற்றிக்கொள்பவர்கள் மலைநாட்டுக் கட்சியினர்.

இவ்வாறான கூட்டுகள் அரசுக்கு ஆபத்தானவை என்பதை ஐ.தே.கட்சி நன்கு தெரிந்தே வைத்திருக்கிறது. அவ்வாறான நிலையில் அது என்ன செய்திருக்க வேண்டும்?

நாட்டு மக்கள் கடந்த எட்டு ஆண்டுகளாகச் சமாதானத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

தனிக்கட்சி ஆட்சியால் சமாதானத்தைக் கொண்டு வரமுடியாது என்பதை உணர்ந்து - இரு பேரினக் கட்சியினரின் பலத்தையும் அங்கீகரித்தார்கள்.

ஆனால், இலங்கை மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாததற்கு ஒட்டுமொத்தமாக இரு கட்சிகளுமே பொறுப்பு என்று கூறலாம்.

நாட்டில் இனப் பிரச்சினையை இரு பேரினவாதக் கட்சிகளும் இணைந்தே தீர்க்கவேண்டும் என்பதுதான் பெரும்பான்மை மக்களின் விருப்பமாக இருக்கிறது.

மக்களின் இந்த முடிவை ஏற்காது ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் நாட்டைவிட தங்கள் தங்கள் கட்சிநலனே பெரிது என நினைப்பது தவறாகும். அவர்கள் வீம்புக்கு வேட்டையாடுவது - மூர்க்கனும் முதலையும் கொண்டதை விடுவதில்லை என்பதையே உணர்த்துகிறது.

**பூ.ம.செல்லத்துரை**

நாட்டின் இன்றைய நிலை அதள பாதாளத்தில் இருக்கிறது. நாட்டின் நிலையைத் தாக்குப் பிடிக்கும் அளவு நாட்டின் பொருளாதாரமில்லை. அபிவிருத்தி அம்போ என்று ஆகிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் ஆல் போல் தழைத்து அறுகுபோல் பரவுகிறது.

உணவுப் பொருள்களின் விலை யானை விலை, குதிரை விலையாகின்றது. நாட்டில் சட்டம், ஒழுங்குகள் நலிந்துவிட்டன. நாளும் பொழுதும் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. சபாநாயகரே இதுபற்றி நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேச உடைமைகள் படிப்படியாக தனியார்மயமாகின்றன. பெரும் பகுதித் தொழிலாளர்கள் கட்டாயத்தின் பேரில் தொழிலிழக்கப் பணிக்கப்படுகின்றனர்.

நாடு எதிர்நோக்கும் அதிபயங்கரமான, மோசமான நிதிநிலையில் 600 கோடி ரூபாவை ஏப்பமிடும் தேர்தல் அவசியமா?

இது பற்றி நாட்டை ஆள்பவர்கள் - நாட்டின் நலம் விரும்பும் புத்திஜீவிகள் சிந்திக்க வேண்டும்.

நாட்டின் இன்றைய அவல நிலைக்கு நாட்டை ஆண்ட இரு கட்சிகளுமே காரணம். எனவே, இந்த ஆபத்திலிருந்து நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பும் இரு கட்சிகளின் தலையாய கடமையாகும்.

### நாட்டு நலனே முக்கியம்

இவ்வாறான நாட்டின் ஆபத்தான நிலையில் நாட்டின் நலனே முக்கியமானது; கட்சி நலனல்ல என ஒதுக்கி - ஓரங்கட்டிவிட்டு - இரு கட்சிகளும் இணைந்து ஒரு தேசிய அரசை அமைக்க முன்வரவேண்டும்.

இரு கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசை உருவாக்கினால் நாட்டின் பொருளாதார வளம் சிறக்கும் என்பதை, மறுக்கமுடியாது.

தமிழ்த் தேசிய தலைவர் வே.பிரபாகரன் முன்னர் நடத்திய பத்திரிகை மாநாட்டில் "பிரதமர் ரணிலினால் எங்கள் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாணமுடியாது. சர்வநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் குறுக்கீடு உண்டு. அதைப் பார்க்க வேண்டிய பொறுப்பு ரணிலுடையது," எனக் கூறி, ஆட்சியாளரின் கடமையைக் கோடிட்டுக் காட்டினார்.

இக்கருத்தையே விரிவாகப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவப் பேராசிரியருமான அன்ரன் பாலசிங்கம் "ஐ.தே.முன்னணியால் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாணவேண்டுமேயானால் இரு முன்னணியும் இணைந்தால் தான் முடியும்" எனக் கூறினார்.

### ஒற்றுமை அவசியம்

எனவே, நாட்டு மக்களும் நாட்டின் நலனில் அக்கறையுள்ள புத்திஜீவிகளும், விடுதலைப் புலிகளின் தலைமையும் இரு கட்சிகளின் ஒற்றுமைபற்றி வலியுறுத்தியிருப்பதை மறுப்பதற்கில்லை.

இதை அமுல்நடத்த ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தங்கள் தங்கள் பக்கத்திலுள்ள கடும்போக்காளர்களை அகற்றிவிட்டு ஒரு தேசிய அரசை ஏற்படுத்தி நாட்டின் புரையோடியுள்ள தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாதா?

நாட்டையும் நாட்டுமக்களையும் பாதுகாக்கவேண்டும்.

இரண்டு கட்சியினருமே சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறுகிறார்கள்.

தனித்தனியாக இதனைக் கூறுவதை விடுத்து இரண்டு தரப்பினரும் சேர்ந்து சமாதானத்தைக் கொண்டு வந்துவிடலாம். ஒரு கை தட்டிச் சத்தம் வராது. இரு கைகள் தட்டினால் தான் சத்தம் ஏற்படும்.

நாட்டிலுள்ள இன்றைய நிலைகளை மையமாக வைத்து தேர்தல் களத்தில் இறங்கினால் அது மண் குதிரையை நம்பி ஆறு கடக்க முற்பட்ட கதையாகவே முடியும்.

தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறமுடியாத நிலை மீண்டும் ஏற்படும்.

தேசியப் பிரச்சினைகளைத் தேசிய அரசுமூலம் தீர்க்கமுடிந்தால் நாட்டில் அமைதி ஏற்படும். தனிப்பட்ட கட்சிகளை அது பாதிக்காது. தேசிய ஒற்றுமைக்கு அது வித்திடும் என்று அமைதி விரும்பிகள் தெரிவிக்கின்றனர். ★

## நிதானமான நியாயமான விலைகளில்

* பஜாஜ் முச்சக்கர வண்டிகள் கையிருப்பில் இருந்து
* பஜாஜ் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள்
* கெஸ்ரெற்னர் நிறுப்பிரதி மற்றும் ரோணியோ இயந்திரங்கள் விற்பனையும் திருத்தம், பராமரிப்பும்.

இவற்றின் தேவைகளுக்கும் சேவைகளுக்கும்

* டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்,
* ஜெஸ்ரெற்னர் ஒவ் சிலோன் லிமிட்டட்

நிறுவனங்களின் யாழ்.மாவட்ட முகவர்களான எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம் -வரையறுக்கப்பட்டது,
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/24738)


## அறிவித்தல்

## கா.சீ.பொ.தொ.யூனியன்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இதுவரை வேலை வழங்கப்படாத அனைத்துத் தொழிலாளர்களும் 09.11.2002 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ப.பாலகிருஷ்ணர் தலைவர். (10347) மா.விஜயரட்ணம் செயலாளர்.

உ
சுகமயம்

### ஈழத்துப் பழமுதிர்சோலை மீசாலை மேற்கு இலந்தைக்கூடல் திருவருள்மிகு கங்காணியார் கந்தசுவாமி திருக்கோயில்

## ஸ்கந்தஷஷ்டி உற்சவம்

மேற்படி தேவஸ்தானத்தில் ஆறு தினமும் மாலை 3.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகம், தொடர்ந்து மூலவர் பூசை, வசந்த மண்டப பூசை உற்சவம் என்பன நடைபெறும். 10.11.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சூரசங்காரம் நடைபெறும்.

12.11.2002 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

பிரதமகுரு: பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக்குருக்கள் (சபரீசதாஸன், கோண்டாவில்)

ஆலய பிரதமகுரு: பிரம்மஸ்ரீ சு.மகாதேவ சர்மா.

(10348) பரிபாலன சபை.

## யாழ்.மத்திய கல்லூரி ஊடாக விண்ணப்பித்த உயர்தர மாணவருக்கு!

யாழ்.மத்திய கல்லூரி ஊடாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக விண்ணப்பிக்கும் சகல மாணவர்களும் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு 2ஆம் தடவையாக தோற்ற கல்லூரியூடாக விண்ணப்பித்த அனைவரையும் இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்குமாறும், மேற்படி பரீட்சைக்குத் தோற்றாத எந்தவொரு மாணவரும் கல்லூரியால் பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும், அவர் அறிவித்துள்ளார். (ஓ-5)

## 'யுனெஸ்கோ' குழு யாழ்.வருகிறது

'யுனெஸ்கோ' நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இருநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அன்றையதினம் காலை வருகை தரும் இக்குழுவினர் யாழ்.அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், யாழ்.மாநகர முதல்வர் மற்றும் பொது அமைப்புக்கள் சார்ந்தோர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். (ஓ-5)

## விபத்தில் காயம்!

செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவர் டிரக் ஒன்றுடன் மோதிக்கொண்டதில் படுகாயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த நல்லதம்பி கனகசபை(வயது 72) என்பவர் யாழ்.பருத்தித்துறை வீதியில் உள்ள புராப்பொறுக்கி, ஆலையடிப் பகுதியில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானார். மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஓ-12)

## நன்றி நவிலல்



இதயத்தின் ஆழத்தில் எழும் நன்றி உணர்வுடன் இறைவனுக்கு என் முதற்கண் நன்றிகள்

எனது 25ஆவது வருட குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலியில் என்னுடன் இணைந்து பலி ஒப்புக் கொடுத்த குருமுதல்வர், குரு நண்பர்கள், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள் அனைவருக்கும் வெளி நாடுகளிலும், உள்ளூரிலும் இருந்து வாழ்த்துச் செய்தியும் அன்பளிப்புக்களும் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் நன்றிகள்.

மேலும் என்னுடன் ஒத்துழைத்த அனைவருக்கும். எனது இளவாலை பங்கு மக்களுக்கும், நான் பணியாற்றிய பங்கு மக்களுக்கும், கரம்பொன் ஊர்மக்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகள்.

அருட்தந்தை பொனிபஸ்
F.பஸ்ரியாம்பிள்ளை
(இளவாலை பங்குத்தந்தை)

(10361)

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை கோணாமலை சங்கரதாஸ்

(ஜே.பி.)

திருகோணமலை, பிருந்தாவனம், 12, கஸ்கிசன் வீதியைச் சேர்ந்த மு.கோ.சங்கரதாஸ் அவர்கள் (அகில இலங்கை சமாதான நீதிவான்) 04.11.2002 திங்கட்கிழமை சிட்னியில் (Australia) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோணாமலை - சின்னத்தங்கம் ஆகியோரின் மூத்த புதல்வரும் பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் தயாளன் (Engineer MBA, Australia), Dr.நிமலன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), காலஞ்சென்ற நடேசன் மற்றும் கேசவன் (Engineer MBA, Australia), Dr.அருந்ததி (தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுமதி (கணக்காளர்), ஜெயந்திரா தேவி (B.A.), Dr.தயாளினி, Dr.பொன்னுசாமி (நவலோக றுகுண மருத்துவமனை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மு.கோ.செல்வராசா (J.P.U.M.), கமலநாயகி, ஜெகசோதிமலர், இன்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருஷாந்தி, விசாகன், பிருந்தா, கவிதா, ரகுவரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

திருகோணமலையில் நடைபெறவுள்ள அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.S.நிமலன்
T.P.: 388238

*செல்வம்.*
*021-222 2880*

(10345)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி
## நவமணிதேவி அருணாசலம்

(இளைப்பாறிய ஆசிரியை)

திதி:
பூர்வபக்க திருதியை

தாயின் மடியில்
1944.03.17

மாயவன் மலரடியில்
2001.10.19

அன்னையே அருந்துணையே அங்கிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயிரும் உந்தன் தாளடியில் சரணம் என்றோம்
மாதாவே உந்தன் மலரடியில் நாம் பணிந்தோம்.

*தற்காலிக முகவரி:*
*478, ஆஸ்பத்திரி வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

*நிரந்தர முகவரி:*
*"தேவி வாசம்"*
*மயிலிட்டி வடக்கு,*
*காங்கேசன்துறை.*

*உங்கள் பிரிவால் வாடும்:*
அன்புக் கணவர்,
பிள்ளைகள்.

(C/24736)

# இராணுவத் தலைமையை தமக்கு சாதகமாக மாற்றுவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சி!

## குற்றஞ்சாட்டுகின்றார் மங்கள சமரவீர

புலிகளுக்குச் சார்பான இராணுவத் தளபதி ஒருவரை நியமிக்க புலிகள் விரும்புகின்றார்கள். எட்டு இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்றுச் செல்வது தொடர்பாக புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா தெரிவித்துள்ள கருத்துக்கள் இதைப் புலப்படுத்துகின்றன.

- இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகத்துறை சார்பாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

புலிகளின் தளபதி கருணா அண்மையில் தாய்லாந்தில், இலங்கை இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகளில் எட்டுப்பேர் ஓய்வுபெற்றுச் செல்வதால் இலங்கை இராணுவத்திற்கு பாரிய பின்னடைவைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகும் எனத் தெரிவித்திருந்தார்.

புலிகளின் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தமை, இராணுவ உயர் மட்டத்தில் தமக்கு சாதகமான ஒரு நிலையையும் நன்மதிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாயம் ஆகும்.

இவரின் இந்தக் கருத்துக் காரணமாக இராணுவத்திற்குள்ளும் புலிகளுக்கு சார்பான ஒரு நிலை உருவாகியுள்ளது.



புலிகளின் தலைவர் இந்திய நீதிமன்றத்திலும் இலங்கை நீதிமன்றத்திலும் ஒரு குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டவர் எனத் தெரிந்தும் அரச சார்புப் பத்திரிகை ஒன்று புலிகளின் இந்தக் கருத்தை முன்பக்கத்தில் பிரசுரித்துள்ளது. முப்படைத் தளபதிகள் பலரை - டென்சில் கொப்பேகடுவ, கிளன்சி பெர்ணாண்டோ, விமல் விஜயரத்ன போன்றவர்களை - கொன்றதுடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரையும் புலிகள் சுட்டுக்கொன்றுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்களை அங்கவீனர்களாக்கியுமுள்ளனர்.

இப்படிப்பட்ட புலிகள் இராணுவ உயரதிகாரிகள் ஓய்வுபெற்றுச் செல்வதால் இராணுவம் தனது சக்தியை இழக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துக் கவலைப்படுகின்றனர்.

இலங்கை இராணுவத்தைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடிக்கும் கருணாவின் செயல் வேடிக்கையானது. இன்றைய அரசாங்கத்தில் புலிகள் சதுரங்க ஆட்டம் ஆடுகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தை அகற்றக்கோரி பலத்த

(11ஆம் பக்கம் பார்க்க)


VISA | PLUS | VISA Electron | MasterCard | Cirrus | Maestro

உங்களுடைய
வங்கி அட்டை இந்தக்
குறியீடுகளைக் கொண்டுள்ளதா?

அப்படியானால், உங்கள் வங்கிக்கணக்கு எந்த வங்கியில் இருந்தாலும், உங்களுடைய அட்டை எந்த வங்கியை சேர்ந்ததாக இருந்தாலும் கொமர்ஷல் வங்கியின் தன்னியக்க இயந்திரம் (ATM) மூலம் பணத்தை மீளப்பெற முடியும் நாடுபூராகவும் 130க்கும் மேற்பட்ட தன்னியக்க இயந்திரங்களினுடாக (ATM) நாட்டின் நான்கு திசைகளையும் இணைத்துள்ள இலங்கையிலேயே மிகப்பரந்த ATM வலையமைப்பு மூலம் உங்களுடைய வங்கிக் கணக்கில் 24 மணித்தியாலமும் பணத்தை மீளப்பெற முடியும்.

கொமர்ஷல் வங்கி

Q & E Advertising

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## சந்தைக் கடைகள், இறைச்சிக் கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2003

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01.01.2003ஆம் திகதி முதல் 31.12.2003 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 27.11.2002ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைப்பணமும் கேள்விப் படிவக்கட்டணமும் ரூ.300.00 (பெறுமதி சேர் வரி உட்பட)வும் செலுத்துவதன் பேரில் 26.11.2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3மணிவரையும் யாழ். மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்களை யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்குமுத்திரை இடப்பட்ட உறையிலிட்டு 27.11.2002ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 12.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர்குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப் பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 27.11.2002ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50%க்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருளகளின் பெறுமதியின் மூன்று வீதத்திற்கு (3%) மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா2.00உம், மோட்டார் சைக்கிளிற்கு ரூ4.00இற்கும் மேலதிகமாகப் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் தொகைக்கு மேலதிகமாக 20% பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகளுக்கு விலை மதிப்புத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத் தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்துதல் வேண்டும்.

### அட்டவணை

| சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம். | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|
| 01. பெரியகடை மரக்கறிச்சந்தை | 5000/- | 358000.00 |
| 02. கொட்டடி/பண்ணை மீன்சந்தை | 5000/- | 1760000.00 |
| 03. குருநகர் சந்தை | 5000/- | 661000.00 |
| 04. செங்குந்தா சந்தை | 5000/- | 463500.00 |
| 05. நாவாந்துறை சந்தை | 2500/- | 67000.00 |
| 06. பாஷையூர் சந்தை | 2500/- | 40000.00 |
| 07. புங்கன்குளம் | 2500/- | 15000.00 |
| துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | | |
| 01. கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2500/- | 30000.00 |

| இறைச்சிக்கடைகள் | இல. | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (பெறுமதி சேர் வரி) |
|---|---|---|---|
| 01. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 1. | 2500/- | 28000.00 |
| 02. ” ” | 2. | 2500/- | 37000.00 |
| 03. ” ” | 3. | 2500/- | 39700.00 |
| 04. ” ” | 4. | 2500/- | 29000.00 |
| 05. ” ” | 5. | 2500/- | 23000.00 |
| 06. ” ” | 6. | 2500/- | 22000.00 |
| 07. ” ” | 7. | 2500/- | 40900.00 |
| 08. ” ” | 8. | 2500/- | 22000.00 |
| 09. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | 1. | 5000/- | 171000.00 |
| 10. செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | 1. | 2500/- | 33300.00 |
| 11. ” ” | 2 | 2500/- | 29000.00 |
| 12. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 1. | 5000/- | 128200.00 |
| 13. ” ” | 2. | 2500/- | 70000.00 |
| 14. ” ” | 3. | 2500/- | 85000.00 |
| 15. ” ” | 4. | 2500/- | 55700.00 |
| 16. ” ” | 5. | 2500/- | 52700.00 |
| 17. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 6. | 2500/- | 82500.00 |
| 18. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | 7. | 2500/- | 9000.00 |
| 19. பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | 1. | 2500/- | 48500.00 |
| 20. ” ” | 2. | 2500/- | 35500.00 |
| 21. புங்கன்குளம் ” | 1. | 2500/- | 25000.00 |
| 22. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 1. | 2500/- | 34700.00 |
| 23. ” ” | 2. | 2500/- | 12000.00 |
| 24. ” ” | 3. | 2500/- | 17000.00 |
| 25. ” ” | 4. | 2500/- | 8000.00 |
| 26. ” ” | 5. | 2500/- | 9000.00 |
| 27. ” ” | 6. | 2500/- | 6000.00 |
| 28. ” ” | 7. | 2500/- | 9700.00 |
| 29. ” ” | 8. | 2500/- | 5500.00 |
| 30. ” ” | 9. | 2500/- | 5500.00 |
| 31. ” ஆட்டிறைச்சிக்கடை | 10. | 2500/- | 5500.00 |
| 32. ” கருவாட்டுக்கடை | 11. | 1000/- | 3500.00 |
| 33. ” ” | 12. | 1000/- | 3500.00 |
| 34. அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 1. | 1000/- | |
| 35. ” ஆட்டிறைச்சிக்கடை | 1. | 1000/- | |

முக்கிய குறிப்பு| கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பெறுமதி சேர் வரியாக 20%ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். அத்துடன் தனியார் காணிகளில் எதுவித இறைச்சிக்கடைகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 2002.11.05

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

எனது மூக்குக் கண்ணாடி 03-11-2002ஆம் திகதி நவிண்டில் பகுதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் யோன் ஜெயரத்தினம், சீனட்டி, கரணவாய் மத்தி, கரவெட்டி என்னும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். அல்லது அருகில் உள்ள கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கவும். (10360)

# ஊர்காவற்றுறை பிரதேச சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் -2003

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி 22.11.2002
02 கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 25.11.2002 ந.ப 12..00 மணிவரை. அன்றைய தினம் பி.ப 1.00 மணிக்கு கேள்விகள் திறக்கப் படும். அவ்வேளை கேள்விகள் சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கலாம்.
03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
04. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தலுக்கான அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரபணம் (மீளளிக்கப் படாதவை) | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்க கூடியது) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல.01 (மாத வாடகை ரூபா 150 அறவிடப்படும்.) | 150 /- | 2000/- | 90000/- |
| 02. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல.02 (மாத வாடகை ரூபா 150 அறவிடப்படும்) | 150/- | 2000/- | 80000/- |
| 03. | ஊர்காவற்றுறை மீன் சந்தை | 150/- | 1500/- | 60000/- |
| 04. | நாரந்தனை மீன் சந்தை | 100/- | 300/- | 9000/- |
| 05. | புளியங்கூடல் மீன் சந்தை | 50/- | 100/- | 3500/- |
| 06. | காரைநகர் பழைய கண்டி மீன் சந்தை | 200/- | 500/- | 15000/- |
| 07. | காரைநகர் வேம்படி மீன்சந்தை | 200/- | 500/- | 17000/- |

*குறிப்பு:-* கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப்பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 20% செலுத்துதல் வேண்டும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை
அலுவலகம்,
ஊர்காவற்றுறை
06.11.2002 (C/24744)

திரு.நா.திருச்செல்வம்
உப தலைவர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் இளைப்பாறிய செயலாளராகிய

### தியாகராஜ சர்மா கணேஸ்வர சர்மா

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வலிகாமம் தெற்கு பிரதேச சபை,*
*சுன்னாகம்.* (10367)

தலைவர், செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா பொன்னையா

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

சண்டிலிப்பாய் காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னையா நேற்று (06.11.2002) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவபாதம் (முன்னாள் இ.மி.ச. ஊழியர்), சிவகுமாரன் (முன்னாள் இ.மி.ச. ஊழியர்), நடேசபிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, வாலாம்பிகை, ரஞ்சினிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சிவதர்ஷினி ரவிச்சந்திரன், சிவரஞ்சன் (லண்டன்), சிவரூபி, திருமதி சிவசக்தி சௌவுந்தரராஜன் (பிரான்ஸ்), சிவாஸ்கரன் (யாழ்ப்பாணம். ப.நோ.கூ. சங்கம்), டசோதா (தரம் 9, யா/இந்து மகளிர் கல்லூரி), தீபன் (கனடா), நிலூபா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் சங்கீதா, சாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.11.2002) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.சிவகுமாரன்
(மகன்).

*காளிகோவிலடி,*
*சண்டிலிப்பாய்.* (10369)

## சதாசிவம் சதானந்தசிவராஜா (சிவம்)

வதிரி, தாரிக்கப்பற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சதானந்த சிவராஜா (சிவம்) அவர்கள் நேற்று (06.11.2002) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் சதாசிவம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் ச.இராஜகௌரி அவர்களின் அன்புக் கணவரும் ச.கரன் (மாணவன், சுவிஸ்), ச.சுரேஷ் (யா.நெ.மத்திய கல்லூரி), ச.துளசி (மாணவி, யா.நெ. மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் சதானந்தராஜா (மூத்தண்ணா), சதானந்தநேசன் (கனடா), சதானந்தலோகன் (பிரான்ஸ்), சதானந்தகுமார் (பிரான்ஸ்), சசிகலா (கனடா), சதானந்தன் (பிரான்ஸ்), சதானந்தநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு.சிவபாலன் (சகலன்)
(குமரன் மில் உரிமையாளர்).

*வதிரி,*
*நெல்லியடி.* (10370)

# பேராளர் மனதைப் பாதித்த அக்கினிப் பெருமூச்சு நாடகம்

**'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நிகழ்வில் மேடையேறறப்பட்ட கலை வடிவங்களில் 'அக்கினிப் பெருமூச்சு' நாடகமும் ஒன்று. அந்த நாடகம் குறித்து தமிழகப் பேராளர்கள் மூவரின் கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.**

கடந்த மாதம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நிகழவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 'அக்கினிப் பெருமூச்சு' என்னும் நாடகத்தை மேடையேற்றினார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் கடந்த பல நூற்றாண்டுகளாக மனிதர்கள் காணாமற் போதல் என்ற அவலம் நடந்து வருகிறது. காணாமற்போன ஒவ்வொரு மனிதனதும், அவன் சார்ந்த சூழலினதும் வேதனை பயங்கரமானது. இந்தக் கதைகள் வீரசிங்க மண்டபத்தில் நாடக மொழியூடாகப் பேசப்பட்டன.

இராணுவக் கெடுபிடிக் காலமாகக் காணப்பட்ட 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டபோது பல்வேறு இடங்களிலும் இருந்துவந்த பேராளர்கள் பார்த்தார்கள். அவர்களின் மனங்களில் இந்நாடகம் கிளர்த்திய உணர்வுகள் பற்றிப் பலருடனும் பேசினார்கள். இவ்வாறு பேசியவர்களில் இந்தியாவில் இருந்து ஒன்றுகூடலுக்கு வந்திருந்த இயக்குநர் புகழேந்தி, ஓவியர் மருது, கவிஞர் இன்குலாம் போன்றோரும் அடங்குவர். இவர்கள் நாடகத்துறையோடும் பரிச்சயம் உள்ளவர்கள். இவர்களின் அபிப்பிராயங்களை, அனுபவங்களை இங்கு தருகிறோம்.

### இயக்குநர் த.புகழேந்தியின் கருத்து

"அக்கினிப் பெருமூச்சு நாடகம் பொதுமக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையைச் சித்திரிப்பதில் மிகப்பெரிய



வெற்றியைப் பெற்றிருக்கிறது என நான் நினைக்கிறேன். குறிப்பாக ஒரு நான்கு பேரை குறியீடாக ஏனோ தானோ என்ற மனப்பாங்கில் 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' மற்றவர்களுக்குத் தானே நடக்கிறது நமக்கெதுவும் ஆகலையே. அதுவரை நாம் பாதுகாப்பாக இருப்போம் என்ற சுயநலப் போக்கைச் சாடுகிறது.

– இந்த நாடகத்தில் பல இடங்கள் என்னைக் கவர்ந்தன. குறிப்பாக கணவனை இழந்த பெண் அழுத பின் தாயும் மகளும் சந்திக்கின்ற காட்சி, பேசிய வசனங்கள் இரண்டு நடிகைகளின் நடிப்பு எல்லாம் மிகவும் நன்றாக இருந்தது. நாடகத்தில் இசை, காட்சியோடும் நாடகத்தோடும ஒத்துப்போவதாக இருந்தது. நாடகக் கட்டுக்கோப்பை மீறி ஒலிக்காமல் இருந்தது இசையின் சிறப்பு என்று நினைக்கிறேன்.

தமிழகத்தில் போடப்படும் நாடகங்களுடன் இந்த நாடகத்தை ஒப்பிடமுடியாது. தமிழகத்தில் இதைப் போன்ற சோதனை முயற்சிகள் இருக்கின்றன. ஆனால், பெரும்பாலும் தமிழகத்தில் வெற்றி பெறுகின்ற நிகழ்ச்சிகள் இந்தமாதிரி பெரிய நிகழ்ச்சிகளினூடாக நடக்கின்ற நிகழ்ச்சிகள் வியாபாரக் குப்பையாகத்தான் இருக்கிறதே தவிர நல்ல நாடக முயற்சியாக இல்லை. இதனைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வெட்கமாக இருந்தது. தமிழ்நாட்டில் இப்படியொரு முயற்சி இல்லையென்று இந்த மாதிரி முயற்சிகள் தமிழ்நாட்டில் வரவேண்டும் என்பதற்கு இதையொரு உதாரணமாக எடுத்துக்கூற முடியும். சொன்ன செய்தி, சொன்ன விதம் நன்றாக இருந்தது. கலந்து கொண்ட கலைஞர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பு அவர்களது ஈடுபாடு தெரிந்தது. இவ்வளவு பெரிய குழுவை வைத்துப் பயிற்சியைக் கொடுத்து இவ்வளவு பேரையும் தன்னுடைய எழுத்துருவுக்குத் தக்க மாதிரி நடிக்க வைத்த அந்த இயக்குநரின் உழைப்புத் தெரிந்தது.

**த.பிரபாகரன்**

### ஓவியர் மருதுவின் கருத்து

'எனக்கு நாடகம் பார்க்கும்போது நிறைய படிமங்கள் (Images) நினைவு வந்தன. குறிப்பாக புதை குழிகளில் இருந்து கைகள் வந்ததும், அதில்



இருந்து ஆள்கள் எழுந்து வந்ததும். லைஸ்தோ தூர் என்பவர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓவியர். போன நூற்றாண்டு முழுவதும் இருக்கிற கவிஞர்களை, ஓவியர்களை, திரைப் படத்துறையில் இருப்பவர்களை இவரது படங்கள் ரொம்பப் பாதிச்சிருக்கு. பைபிளுக்கு இவர் தீட்டிய படங்கள் இருக்கு. அவரது படங்களுடன் கூடிய பைபிள்களே உலகில் அதிகமாக விற்றன. எனக்கு அவர் படங்களில் உள்ள தரத்திலான படிமங்களாக (Images) இந்த நாடகம் எனக்குத் தெரிந்தது. நாடகத்தை இயக்கியவர்கள் இவரது படங்களைப் பார்க்க வாய்ப்பில்லை. அது இயல்பாக வந்தது. பொருள், உடல் அமைப்பு, உடல் மொழி பல இடங்களில் நன்றாக இருந்தன. வெறும் படிமங்களாகவே நிறைய இருந்தன. தமிழ்நாட்டில் நவீன நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். படிமமும் இசையும் சேர்ந்து வருவதான இடம் தமிழ்நாட்டில் அமையவில்லை. இசை ரொம்ப இணைவுத் தன்மையுடன் இருந்தது.

### கவிஞர் இன்குலாப்பின் கருத்து

நாடகத்தில் இசை மனதைப் பிழிந்தது. குறிப்பாகத் தாலாட்டுப் பாட்டை இடமறிந்து பயன்படுத்தியது நல்லாயிருந்தது. நான் நாடகங்களை எழுதுறவன். இதைப் பார்க்கும்போது இப்படியொரு நாடகம் எழுதலாம் என்று மனதில் நினைத்தேன். அந்தளவுக்கு நாடகம் என்னைப் பாதித்தது. எனக்குச் சவாலாக இருந்த எழுத்துருக்களில் இதுவும் ஒன்று. இப்படியெல்லாம் செய்யமுடியுமா? செய்தால் என்ன? என்று நினைத்துப் பார்க்கின்ற நாடகங்களில் இதனையும் ஒன்றாக நான் நினைக்கிறேன். சென்னையில் சில நாடகங்கள் இந்தளவுக்கு இருக்கின்றன. இதில் முழுக்க முழுக்க குறியீடுகளாகவே போய்க்கொண்டிருப்பது மிக நன்றாகவே இருந்தது. மிகச் சிறப்பாகச் சென்னையில் செய்யப்



படும் நாடகங்களோடு இந்த நாடகத்தையும் சேர்க்கலாம். சென்னையில் வசதிகள் அதிகம். இருப்பினும் இந்தளவுக்கு பிசகாமல் செய்வது என்பது ஆச்சரியமாய் இருந்தது. ☆

# குற்றத் தடுப்புப் பிரிவு கலைக்கப்பட்டது ஏன்?

## உள்துறை அமைச்சர் தரும் விளக்கம்

கொழும்பு,நவ.7

அரசியல்வாதிகளின் நெருக்குதலால் பாணந்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவு கலைக்கப்படவில்லை என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இந்த விசேட பிரிவு கலைக்கப்பட்டது, நாடுபூராகவும் இதுபோல் விசேட குற்றத்தடுப்புப் பிரிவு அமைப்பதற்காகும். இவற்றில் தற்போது கலைக்கப்பட்ட பொலீஸ் பிரிவில் கடமையாற்றிய பொலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதன் முதல் கட்டமாக மேல் மாகாண தெற்குப் பகுதியில் எதிர் வரும் 15ஆம் திகதி விசேட குற்றத்தடுப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் இந்த விசேட பிரிவு இருப்பது நியாயம் இல்லை. ஆகவே, மாகாண மட்டத்தில் இந்த விசேட குற்றத்தடுப்புப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது என அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி பாணந்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவு கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# ஊர்காவற்றுறை பிரதான வீதியை திறந்துவிடுமாறு கோரிக்கை

## சலன சித்திர அமைப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம்

ஊர்காவற்றுறைப் பிரதான வீதியை மாணவர்களின் பாவனைக்குத் திறக்கக் கோரி பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதியே யாழ்ப்பாணம் சலன சித்திர சமூகத்தினர் பாதுகாப்பு அமைச்சருக்கு இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி கல்லூரிச் சுற்றாடலில் முகாம் அமைத்துள்ள அரச கடற்படையினர் பிரதான வீதியை மூடிவிட்டு சிறு வீதியொன்றை மாணவர்களின் போக்குவரத்துக்காக அமைத்துக்கொடுத்துள்ளனர்.

இப்போது மழைக் காலமாகையால் அமைக்கப்பட்ட சிறு வீதி மழை வெள்ளத்தால் சேறும், சகதியுமாகக் காணப்படுகிறது. மாணவர்களும், ஆசிரியர்களும் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மாணவர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு வேலணை - ஊர்காவற்றுறை பிரதான வீதியை போக்குவரத்துக்குத் திறந்துவிடுமாறு கோருகின்றோம் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத் தலைமையை...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவித்ததால் 383 இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த ஊதியம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவ வீரர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

புலிகளின் தலைமையைச் சிதறடிப்பதற்காக மிலேனியம் சிற்றி வீடமைப்புத் திட்டத்தில் இயங்கிவந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களைப் பிடித்துச் சிறையல் வைத்துள்ளார்கள். புலிகளை வெற்றி கொள்ள ஜனாதிபதி மேற்கொண்ட முன்னேற்றகரமான செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கை புலிகளுக்கு வழங்கத் தீர்மானித்திருக்கும் பிரதமரின் செயலுக்கு முட்டுக்கட்டையாக ஜனாதிபதி இருப்பதால் அவரின் முக்கிய அதிகாரங்களை இல்லாதொழிக்க 19ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பு அதை முடக்கிவிட்டது. இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ம)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 420 |
| திகதி | 05.11.2002 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4555791-4568691

வெற்றி இலக்கங்கள்: 11 30 52 55

லக்கினம்: கன்னி



ஜக்பொட் பரிசு ரூபா. 2,297,250/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,926,850/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 281,784 | 10 | 2,817,840 |
| 2 இலக்கங்கள் | 25,927 | 20 | 518,540 |
| 1 இல + லக்கினம் | 25,694 | 30 | 770,820 |
| 2 இல + லக்கினம் | 2,333 | 100 | 233,300 |
| 3 இலக்கங்கள் | 677 | 500 | 338,500 |
| 3 இல + லக்கினம் | 61 | 5,000 | 305,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,297,250 | - |
| மொத்தம் | 336,480 | - | 5,384,000 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,384,000/-

தொடர் இல. 5552184க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 08ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4559092-7-39
4559839-0-23
4560542-1-90
4557694-5-06
4557802-3-58

அபிவிருத்தி லொத்தர் வாக்குறுதிகளை நிறைவேற்றும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# நடுவரின் தீர்ப்பை ஆட்சேபித்த கழகம் 149 சொந்த கோல்களை அடித்து 'சாதனை'

நடுவரின் தீர்ப்பொன்றினால் ஆத்திரமடைந்த உதைபந்தாட்டக் கழகமொன்று தனக்கு எதிராக 149 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளது.

கடந்த வார இறுதியில் மடகஸ்கார் தேசிய லீக் உதைபந்தாட்டப் போட்டியொன்றிலேயே இந்நிகழ்வு இடம்பெற்றது.

மடகஸ்காரின் புதிய தேசிய சம்பியனான ஏ.எஸ். அடேமா கழகமும் 'ஸ்டேட் ஒலிம்பிக் எமைன்' கழகமும் இப்போட்டியில் மோதின.

இப்போட்டி போர்ட் ஒவ்ரோமாஸினா நகரிலுள்ள ஏ.எஸ். அடேமா கழகத்தின் சொந்த மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின்போது நடுவர் அளித்த தீர்ப்பொன்றை 'ஸ்டேட் ஒலிம்பிக் எமைன்' கழகத்தின் பயிற்றுநர் றட்டிஸ்மண்ட்ரேசி ரக்ஸரக்கா ஆட்சேபித்தார்.

நடுவருடனான வாக்குவாதத்தின் பின் தமக்கு எதிராகவே கோல்களைக் குவிக்கும்படி தமது அணியினருக்கு ரக்ஸரக்கா உத்தரவிட்டார். அவரது அணி வீரர்கள், பயிற்றுநரின் கட்டளையை நிறைவேற்றினர்.

மீண்டும்மீண்டும் தமக்கு எதிராகவே கோல்களை அடித்தனர் அவர்கள். மொத்தமாக 149 கோல்கள் குவிக்கப்பட்டன.

"தமது சார்பாக எதிரணியினர் கோல்களை குவிப்பதைப் பார்த்து ஏ.எஸ்.அடேமா கழக வீரர்கள் திகைப்படைந்து செய்வதறியாது நின்றனர்" என போட்டியை நேரில் பார்வையிட்டோர் தெரிவிக்கின்றனர் - இவ்வாறு மடகஸ்கார் வானொலி அறிவித்தது.

இப்போட்டியில் ஏ.எஸ்.அடேமா கழகம் 149-0 கோல்கள் விகிதத்தில் வென்றது.

இது முதல்தரப் போட்டிகளில் புதிய உலக சாதனையாகும் எனவும் மடகஸ்கார் வானொலி வர்ணித்தது.

தமக்கு எதிராக கோல்களை அடித்த 'ஸ்டேட் ஒலிம்பிக் எமைன்' கழகம் மடகஸ்காரின் முன்னணி கழகங்களில் ஒன்றாகும். கடந்த வருடம் மடகஸ்கார் தேசிய சம்பியனாக இக்கழகம் தெரிவானது. இவ்வருடம் ஆபிரிக்க சம்பியன் லீக் போட்டிகளில அதிர்ச்சியளிக்கும் விதமாக 2ஆம் சுற்றுக்குத் தெரிவாகியது.

இதேவேளை, கடந்த வாரம் ஏ.எஸ்.அடேமா மடகஸ்காரின் தேசிய சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது.

உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸ்' வெளியீட்டாளர்கள், முதல் தரப் போட்டிகளில் அதிக கோல்கள் அடிக்கப்பட்டமை தொடர்பான பதிவுகள் இல்லை என்று தெரிவிக்கின்றனர். சர்வதேச போட்டிகள் மற்றும் வயது அடிப்படையிலான போட்டிகளின் தரவுகள் மட்டுமே அவர்களிடம் உள்ளன.

இதேவேளை, 1885இல் ஸ்கொட்லாந்து எவ்.ஏ.கிண்ணப்போட்டியொன்றில் 'ஆர்புரோத் பிரிட்டிஷ்' கழகம் 'பொன் அக்கோர்ட்' கழகத்தை 36-0 விகிதத்தில் தோற்கடித்தது.

(ஒ-5)

# யாழ்.கலாசாலைகள் அணி 117 புள்ளிகளுடன் முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.7

ஆசிரிய கலாசாலைகளுக்கிடையே மகரகமவில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.கலாசாலை அணி முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாண அணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மற்றும் பலாலி ஆசிரிய கலாசாலையின் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர். இந்த யாழ்.அணி 117 புள்ளிகளைப் பெற்று பதக்கப்பட்டியலில் முதலாம் இடத்தைப் பிடித்தது.

பலாலி ஆசிரிய கலாசாலை அணி சார்பாக பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

### தங்கப்பதக்கம்

அ.சியாம் சுந்தர் (1500 மீ., 5000 மீ. ஓட்டம்), செல்வி திருலேகா இராசையா (800மீ., 1500மீ. 3000மீ. ஓட்டம்), செல்வி செல்வராணி குமாரசாமி (நீளம் பாய்தல்), செல்வி லூட்டி சாந்தி லோகதாஸ் (200மீ.), செல்வி ரூபிகா குமாரசிங்கம் (400மீ.), செல்வி சிவகௌரி சுப்பிரமணியம் (உயரம் பாய்தல்).

### வெள்ளிப் பதக்கம்

வ.செந்தூரன் (முப்பாய்ச்சல்), செல்வி கவிதா கமலநாதன் (தட்டு. குண்டு).

### வெண்கலப் பதக்கம்

வை.உமாசுதன் (ஈட்டி எறிதல்), செல்வி லூட்டி சாந்தி - லோகதாஸ் (100மீ., நீளம்பாய்தல்), செல்வி ரூபிகா குமாரசிங்கம் (1500மீ.), அஞ்சல் ஓட்டம் (4X100மீ. ஆண், 4X100மீ. பெண், 4X400 பெண்).

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அணி சார்பாக பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

### தங்கப் பதக்கம

மத்தியூஸ் கிளென் (நீளம் பாய்தல்).

### வெள்ளிப் பதக்கம்

மத்தியூஸ் கிளென் (100மீ., 200மீ.), செல்வி அனுசியா கிருஷ்ணசாமி (முப்பாய்ச்சல்), திருமதி விமலா தேவி ஜெயசீலன் (400மீ.).

### வெண்கலப் பதக்கம்

நாகையா செந்தில்நாதன் (உயரம் பாய்தல்), திருமதி லூட்ஸ் ஜெயரஞ்சினி வின்ஸ்செனற் ஜேசுராசா (ஈட்டி, எறிதல்), அஞ்சல் (4X400).

சிறந்த தடகள வீராங்கனையாக பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவி செல்வி திருலேகா இராசையா தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, இத்தடகளப் போட்டிகளிற்கு முன்பாக நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பலாலி ஆசிரிய கலாசாலை அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

# ஒரு நாள் போட்டியில் மேற்கிந்திய அணி வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.7

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிகள் இடையேயான ஒரு நாள் போட்டித் தொடரின் முதலாது ஆட்டத்தில் மேற்கிந்திய அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இந்தியாவின் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வேவல் ஹின்டஸ், சர்வான் ஆகியோரின் அபார ஆட்டம் மேற்கிந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுத்தந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் அஜித் அகார்கர் 95 ஓட்டங்களையும் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 47 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 50ஆவது ஓவரின் இறுதிப் பந்தில் இலக்கை எட்டி வெற்றியீட்டியது. மேற்கிந்திய அணி சார்பில் வேவல் ஹிண்ட்ஸ் 93 ஓட்டங்களையும் சர்வான் ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களையும் சாமுவேல் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஒரு கட்டத்தில் இந்திய பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சினை துவம்சம் செய்து வெற்றியை நோக்கி மேற்கிந்திய அணி சென்று கொண்டிருந்த நிலையில் மைதானத்துக்கு வெளியே இருந்த ரசிகர்கள் குழப்பத்தில் ஈடுபட்டதை அடுத்து ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சுமார் 10 நிமிடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஆட்டம் ஆரம்பமானவுடன் மேற்கிந்திய அணி விரைவாக இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது. இதன் காரணமாக ஆட்டத்தின் போக்கு மாறியது. எந்த அணி வெற்றியீட்டும் என்று தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டது. கடைசி ஓவரின் கடைசிப் பந்தில் 3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் அகர்கார் வீசிய கடைசிப் பந்தை சர்வான எல்லைக்கோட்டைத் தாண்ட வைத்தார். அவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

(ஒ-10)

# விளையாட்டு

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் மேலதிக நாள்கள் இல்லை

அடுத்தவருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதற்சுற்றுப் போட்டிகளுக்கு மேலதிக நாள் ஒதுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த உலகக் கிண்ணத் தொடரில் மழையினால் போட்டிகள் பாதிக்கப்பட்டபோது மறுநாள் ஆட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது.

ஆனால், எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டியில் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டால் இரு அணிகளுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

ஐ.சி.சியும் உலகக் கிண்ணப் போட்டி ஏற்பாட்டுக் குழுவும் கூட்டாக விடுத்த அறிக்கையொன்றில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக நாள் ஒதுக்கப்பட்டதால் தங்குமிடம், விமானப் பயணம், செய்மதி தொலைக்காட்சி உட்பட அனைத்துக்கும் இரு மடங்கு பதிவுகள் தேவைப்படுகின்றன.

இதனால் வீரர்கள், ஆதரவாளர்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும்.

- இவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான இயக்குநர் அலிபகர் கூறியுள்ளார்.

எனினும், சுப்பர் சிக்ஸ் கட்டத்திலிருந்து சகல போட்டிகளுக்கும் மேலதிக நாள் ஒதுக்கப்பட்டுள்ளன. மார்ச 23ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு இரண்டு மேலதிக தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - மழையால் பாதிகக்கப்படும் சகல போட்டிகளிலும் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணியின் வெற்றி இலக்கை நிர்ணயிப்பதற்கு 'டக்வேர்த் - லூயிஸ்' விதி பின்பற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-5)

# வை.எம்.சி.ஏயால் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

கடந்த 2ஆம் திகதி யாழ்.வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட மேசைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையர் ஆட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

12 வயது - ஆண்கள்: என்.கமலரூபன், எஸ்.சஞ்சீவன்.

15 வயது - ஆண்கள்: ஆர்.நிஷாந்தன், ஆர்.நிதர்சன்.

17 வயது - ஆண்கள்: ஆர்.நிருஜன், ஜே.சுஜீவன்.

17 வயது - பெண்கள்: எஸ்.சுஜனி, கே.அனுசாந்தி.

இரட்டையர் ஆட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:

15 வயது - ஆண்கள்: ஆர்.நிஷாந்தன் மற்றும் ஆர்.நிதர்சன், என்.ஹெறிபிரவீன் மற்றும் என்.கமலநாதன்.

17 வயது - ஆண்கள்: ஏ.பற்றர் ரஜீவன் மற்றும் ஆர்.நிருஜன், என். கமலநேசன், கே.சுஜீவன்.

17 வயது - பெண்கள்: எஸ். சுஜனி மற்றும் எஸ்.வித்தியாராணி, கே.அனுசாந்தி மற்றும் என்மகிழினி.

வயதுக்கட்டுப்பாடின்றி நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் வி.நிஷாந்தன், ஜே.மோகன் ஆகியோரும் ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் பி.ஜெயதாஸன் மற்றும் ஆர். சுகந்தன், எஸ். மதிவாணன் மற்றும் எஸ்.சபேசன் ஆகியோரும், கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் ஆர்.சுகந்தன், எஸ். மைதிலி, கிருஷாந்தன், நிஷாளினி ஆகியோரும் இறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# விளையாட்டுச் செய்தித்துளிகள்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தினால் நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் இரண்டு தினங்கள் யாழ்மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவிருந்த மாவட்ட விளையாட்டுப் போட்டி, கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டுப் போட்டி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் போட்டி நடைபெறும் தினங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-5)

• • •

யாழ்ப்பாணம்,நவ.7

களுத்துறையில் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு-தெற்கு சமாதான விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குபற்றும் தடகள விளையாட்டு வீரர்களை எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பயிற்சிக்கான ஆயத்தத்துடன் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-5)

• • •

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ். வை.எம்.சி.ஏயினால் நடத்தப்படும் சதுரங்கச் சுற்றுப்போட்டிகள இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் யாழ்.வை.எம். சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டியில் 12வயது, 15 வயதுப் பிரிவுகளில் இருபாலாருக்குமான போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் பதிவுசெய்த அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேநேரம், யாழ். வை.எம்.சி.ஏ. யினால் நடத்தப்பட இருக்கும் கரம் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 9 மணிமுதல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இடம் : புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

காலம் : 09.11.2002 தொடக்கம் 12.11.2002வரை

குறிப்பு:-

1. இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து துறை சார்ந்த நூல்களும் குறைந்த விலையில்!
2. வாசகர்கள் தமக்குத் தேவையெனக் குறிப்பிடும் புத்தகங்கள் உடனடியாகப் பெற்றுத்தரப்படும்.
3. மாணவர்களுக்கு விசேட கழிவு!

யாழ்.வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(10363)



## அழைப்பிதழ்

இலங்கை தேசிய நிர்மாண சங்கம் வடமாகாணக் கிளையின்

வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடம்
காலம்: 10-11-2002 ஞாயிறு மு.ப.10.00 மணி
பிரதம விருந்தினர்: உயர்திரு. செ.பத்மநாதன்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

அனைத்து ஒப்பந்தகாரர்களையும் (கட்டடம், வீதி, நீர்ப்பாசனம்) தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

C.I.C பெயின்ற் BLACK & DECKER, DEWALT உபகரண முகவர்கள் DELMEGE மற்றும் DELMAGE INTERIOR DECOR ஸ்தாபனத்தாரின் விளம்பர விவரண விளக்க நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அனுசரணை: C.I.C.PAINTS
DELMEGE GENERAL - EUQUIPMENT (PVT) LTD.

- தலைவர்.

(10357)



## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின்
உப அதிபர்

### திருமதி இராஜேஸ்வரி குலவீரசிங்கம்

அவர்கள் தனது தன்னலமற்ற 26 வருட சேவையிலிருந்து இன்று 07.11.2002இல் ஓய்வுபெறுகின்றார். இவர் தனது சேவைக் காலத்தில் பாடசாலைச் சமூகத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றியுள்ளார். இவரின் சேவை நலனைப் பாராட்டுவதுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

(10359)

# நாளை நடக்கும் பேரணிக்கு பல அமைப்புகள் ஆதரவு

யாழ்ப்பாணம்,நவ.7

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்து நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பல்வேறு பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளன.

**மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்**

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பானது சமாதான பேச்சுக்கள் நடைபெற்று தமது அபிலாஷைகள் நிறைவேறும் என எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களின் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இத்தீர்ப்பை ஆட்சேபித்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து நடத்தும் பேரணியில் கலந்துகொண்டு தமிழினத்தின் ஆட்சேபனையை சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவிப்போமாக - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்**

இரு தசாப்த காலமாக நடைபெற்று வரும் யுத்தத்துக்கு முடிவு கட்டி சமாதான முன்னெடுப்புக்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகையில் தலைவர் பிரபாகரனுக்கு எதிரான தீர்ப்பு வெளியாகியுள்ளமை சமாதான ஆர்வலர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி தீர்ப்பு வெளியாகியுள்ள நிலையிலும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சமாதான முன்னெடுப்புக்களில் தங்களைத் தொடர்ந்தும் ஈடுபடுத்தி வருகின்றனர். அத்துடன் பேச்சுக்களில் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனை சங்கம் பாராட்டுகின்றது.

எனவே, தலைவர் பிரபாகரனுக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து நடத்தப்படும் பேரணியில் மேற்படி சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் -

சகல சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களும் நாளை தமது நிலையங்களை மூடி பேரணியில் கலந்துகொள்ள வசதியாக யாழ். பரமேஸ்வரா சந்தியில் ஒன்று கூட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வி.நு.கூ.ச.சமாசத் தலைவரும், யாழ்., நல்லூர் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவருமான சி.வி.கந்தையா சிவஞானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்

இது ஒரு நீதிமன்ற தீர்ப்பு என்று புறந்தள்ளிவிட்டு ஸ்ரீலங்கா அரசு வாய்மூடி மௌனியாக இருக்க முடியாது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு இந்த வழக்கு எடுபடாமல் இருப்பதை அரசும் அதன் சட்டத்துறையும் பார்த்திருந்தால் இப்படியான ஒரு நீதிமன்ற தீர்ப்பு வந்திருக்க முடியாது.

எனவே, ஸ்ரீலங்கா அரசு இந்த விடயத்தில் மிகத்தெளிவான அர்ப்பணிப்புடனுமான நடவடிக்கைகளை எடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதன் கீழ் வழங்கப்பட்ட, வழங்கப் படவிருக்கும் தண்டனைகளை ரத்துச் செய்வதன் மூலம் இவ்விடயத்திற்கு சுமுகத் தீர்வு காணவேண்டும். இதனை நாம் வலியுறுத்தி நிற்பதற்கு இந்தப் பேரணி வலுச்சேர்ப்பதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

எனவே, இந்தப் பேரணியில் கூட்டுறவுத் துறை சார்ந்தவர்கள் மட்டுமன்றி ஏனைய அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்த அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் - நாட்டில் வாழும் சகல இன மக்களும் நிம்மதியாக, சுபிட்சமாக வாழ்வதற்கான வழி வகைகள் உருவாக்கப்பட்டுவரும் வேளையில் இந்த நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-10-5-17)

## இன்றைய கலந்துரையாடல்கள்

வலி.கிழக்கு,நவ.7

கோப்பாய் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் கேட்டுள்ளார்.

(எ-180)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

சண்டிலிப்பாய்,நவ.7

வலிகாமம் மேற்கு கோட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்தின் பிரிவுக்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஓ-135)


## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின்
முன்னாள் பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ க.குகதாசக் குருக்கள் அவர்களின் தர்ம பத்தினியாகிய

**நாகலட்சுமி அம்மா**

சிவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மஞ்சவனப்பதி முருகனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆலய நிர்வாக சபையினரும்
இளம் தொண்டர்களும்.

வே.நடராசா *பெறுநர்.* (10371) த.கணேசபிள்ளை *தலைவர்.*

## தவறிவிட்டன

பண்டத்தரிப்பைச் சேர்ந்த மகேந்திரா தமயந்தனின் தே.அ.அட்டை (833334387V), விசேட அ.அட்டை (0904017714), சாரதி அனுமதிப்பத்திரத்துடன் கூடிய மணிபேர்ஸ் இணுவிலுக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

**பேன் நியூ பஷன் ஹவுஸ்.**
பிரதான வீதி, சங்கானை.
(10372) 0777 - 149027

## ராஜா யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்) மீரா நடித்த

**வில்லன்** (ரீலஸ்)



கா.நே: 10.30, 2.30, 6.30 வீசேட காட்சி:9.30 (புதிய நேரம்)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சிம்ரன் நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
இரவு 8.45 (சனி,ஞாயிறு மட்டும்)
FINAL FIGHT (கராட்டிப்படம்)

## நாகம்ஸ் சுன்னாகம்

குணால், மனோஜ், அனிதா, நம்பியார் நடித்த
**வருஷமெல்லாம் வசந்தம்** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.00 (புதிய நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் 6.30



## மரண அறிவித்தல்

### V.S.அந்தோனிப்பிள்ளை

**(இளைப்பாறிய ஆசிரியர் - புனித மரியாள் கல்லூரி, நீர்கொழும்பு)**

ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்ட V.S.அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (06.11.2002) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அலிஸ் அவர்களின் அன்புக் கணவரும் வென்சஸ்லோஸ் (பொபி - லைடன் புடவை நிலையம்), Dr.லீமா (லண்டன்), சில்வி (Shaw - Wallace & Hedges Ltd.), ஜெனற் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் மனோகரி, காலஞ்சென்ற சண்முகநாதன் (லண்டன்) மற்றும் தார்சீசியஸ் (Saverimuthu & Co), குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரீகன், கிருஷாந்தி, ஜோன்சன், ராஜன், ரூபன், பிரிண்டா, டயானா, டேமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், எலிசபெத் மற்றும் அல்பிரட், சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*38, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.* (10375)

தகவல்: வென்சஸ்லோஸ் (பொபி) (மகன்).



## வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

### மயில்வாகனம் இராஜேந்திரன் (J.P.)

*(Diploma in Accountancy MAAT Retired Accountant)*

அவர்கள் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் உயர்திரு.ஆர்.ரி. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் நேற்று 06.11.2002 சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் கீழ்வரும் பதவிகளிலும் அமைப்புக்களிலும் சேவையாற்றி வருகிறார்.

| | |
|---|---|
| தலைவர் - | ஞான வீர சனசமூகநிலையம், கோண்டாவில் |
| உப தலைவர் - | பழைய மாணவர் சங்கம், மானி. மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை |
| பொருளாளர் - | செம்மாதோட்ட ஞானவைரவர் ஆலயம், கோண்டாவில் |
| பொருளாளர் - | ஞான வீர சிக்கன கடனுதவு கூ.சங்கம் |
| கணக்காளர் - | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை. |
| முன்னாள் தலைவர் - | ப.நோ.கூ. சங்கம் யாழ்ப்பாணம் |
| ஓய்வுபெற்ற கணக்காளர் - | அபிவிருத்திச் சபை, கச்சேரி, யாழ்ப்பாணம். |

அவர் நலமுடன் சேவையாற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன்.

ஞானவீர சனசமூக நிலையம் கோண்டாவில்,
(C/24747) ஞானவீர சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்.



## முதலாம் வருட நினைவலைகள் 6ஆம் மாத நினைவலைகள்

மண்ணில் 1927 . 06 . 02



விண்ணில் 2001 . 11 . 07

மண்ணில் 1935 . 07 . 10



விண்ணில் 2002 . 05 . 04

அமரர்
**பொன்னையா பூவிலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.பரியோவான் கல்லூரி)

ஆசையுடன் பாசமாய் வளர்த்த
எம் அன்புத் தந்தாய் – உங்கள்
அன்பு முகம் தேடித் தேடி அலைந்து
ஆண்டு ஒன்றானதே!

அமரர்
**மரியமுத்து பூவிலிங்கம்**
(இளைப்பாறிய உப அதிபர், யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன், யா/வேம்படி மகளிர் கல்லூரி)

அழும் விழிநீர் துடைக்க
அன்னையும் இங்கு இல்லை
அவள் பாசமுகம் மறைந்தும்
மாதங்கள் ஆறானதே!

எம்மை ஈன்ற இனிய பெற்றோரே
பாருலகில் எமக்கு பாதுகாவலராய்
அளித்திடுவீர் ஆசீர்!

உங்கள் நினைவில்:
*இல.85, தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.* (10368) பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. கே.எம்.இராஜேந்திரன்

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு நேற்று 06.11.2002 பதவியேற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*குட்செட் வீதி, கோண்டாவில்.* (10373) திரு.திருமதி ம.ஜெயந்திரன்.

## சேவைநலன் பாராட்டு



திருமதி
### பேபி துரைசிங்கம்
ஆசிரியை அவர்கள்
[Spe.Tred. Art, S.L.T.S. G-1]

இளமையில் கலையதில் இளகிய மனமதில்
அளவினில் இவையென அளவிட முடியாத
உளமகிழ் அம்மணி கலையதைப் புகட்டியே –
இன்று
விலகிடாக் கலையோடு சேவையில்
நிறைவதால்.....

வளம் குன்றா நலம் பெருகி, நீடு வாழ
வாழ்த்திநிற்கும்

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். (10365) *ஆசிரியர் கழகம்.*

# படைக்கு ஆள்திரட்டும் முயற்சி பிசுபிசுப்பு

கொழும்பு,நவ.7

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு 5 ஆயிரம் பேரைத்திரட்டும் நடவடிக்கை மீண்டும் தோல்வியில் முடிந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 16ம் திகதி ஆரம்பமான இந்த ஆள்திரட்டும் முயற்சியில் இது வரை 139பேர் மட்டுமே புதிதாக படையில் இணைந்திருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் முடுக்கிவிடப்பட்டிருந்த இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்பார்த்தளவு பலனைத் தரவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் முதல் இரண்டு மாதங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆள்சேர்ப்பு நடவடிக்கையும் தோல்வியில் முடிந்தமை தெரிந்ததே. (ஐ-4)

# புலிகளின் காவல்துறையில் முஸ்லிம்கள்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ள தமிழீழ காவல் நிலையங்களில் முஸ்லிம் இளைஞர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். புலிகளின் மட்டு - அம்பாறை காவல்துறை மேற்பார்வையாளர் கங்கைபமரன் இதனைத் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். ஆரம்பத்தில் 3,700 ரூபா சம்பளம், தங்குமிட வசதி,உணவு,உடை என்பன வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(ஐ-4)

## அடுத்த ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த நடவடிக்கைகளை எடுத்து சமூகத்தின் அதிர்ஷ்டம் குறைந்த தரப்பினரைப் பற்றி எப்பொழுதும் கவனத்தில் கொண்டு எதிர்காலத்திற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவோம்" - இப்படி அமைச்சர் தனது முடிவுரையில் சொன்னார்.

போரினால் சீரழிந்து சிதைந்துபோயிருக்கும் எமது நாட்டை புனர்நிர்மாணம் செய்வது, சரிந்துபோன பொருளாதாரத்தை நிமிர்த்துவதும் சமாதானத்தை ஏற்படுத்துவதும் எங்கள் அனைவரதும் கடமையாகும் என்று நிதி அமைச்சர் கூறினார்.

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, அத்தியாவசியப் பொருள்களின் விலையில் வீழ்ச்சிக் குறைப்பு மற்றும் பல சலுகைகள் ஆகியவற்றை வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்துக் காத்திருந்த மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு - செலவுத் தட்டத்தை மிகவும் இரத்தினச் சுருக்கமாக சுமார் ஒன்றரைமணி நேரத்தில் அமைச்சர் சமர்ப்பித்தார்.

பி.ப.2.35 மணிக்கு பட்ஜட் உரை அடங்கிய பெட்டியுடன் சபைக்குள் பிரவேசித்த அமைச்சர் சொக்ஸி உடனடியாக தனது பேச்சை ஆரம்பித்தார்.

அப்பொழுது ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேசைகளை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். எதிர் கட்சித் தரப்பினரோ மிகவும் அமைதியாக இருந்தனர்.

ஆனால், முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட பொ.ஐ.முன்னணி உறுப்பினருமான டி.எம்.ஜயரத்ன மட்டும் எதிர்வரிசையில் இருந்து மேசையைத் தட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்பி. கிருஷ்ண பிள்ளையைத் தவிர ஏனைய உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர். அதே வேளை யாழ். மாவட்ட எம்.பி. கஜேந்திரகுமார் வாகன விபத்தில் சிக்கியதால் அவரும் சமுகமளித்திருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், நிமர் தவ்பீக், சின்ன தவ்பீக், டாக்டர் அப்ரத் ஆகிய ஐந்து பேரும் சபையில் காணப்பட்டனர்.

குறிப்பாக இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான், இரா.யோகராஜன் எம்.பி., பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோர் சபையில் காணப்படவில்லை. (ஐ-4)


### ஈழத்து பழமுதிர்ச்சோலை

மீசாலை மேற்கு இலந்தைக்கூடல் திருவருள்மிகு கங்காணியார் கந்தசுவாமி திருக்கோயில் கந்தசஷ்டி உற்சவம் இன்று உதயனில் 8 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள விளம்பரத்தின்படி மேற்படி ஆலயத்தின் சூரசங்காரம் 9.11.2002 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

(10376) பரிபாலன சபை.

### WALK - IN - INTERVIEW

**Sales Representatives**
**For**
**BATA**
***SALES SERVICE CENTRE***

Minium Qualification: **G.C.E. (A/L)**
Call Over With Original Certificates At 2.00 p.m.
On **07.11.2002**

**விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை**
**07.11.2002இல் பிற்பகல் 2.00 மணிக்கு சகல மூல ஆவணங்களுடன் நேரில் வருக.**
*கல்வித் தகைமை:* **ஆகக்குறைந்தது க.பொ.த. (உயர்தரம்)**

**LUKSHMEE ORGANIZATION**
(C/24737) *253, Stanley Road, Jaffna.*

### மேசைத் தொலைபேசி விற்பனைக்கு

டயலொக் (சிம்) போடக்கூடிய மேசைத் தொலைபேசி விற்பனைக்கு உண்டு. டயலொக் கைத்தொலைபேசி அலைவரிசைக்குரிய அன்ரனாக்கள் உடன் பூட்டித்தரப்படும்.

*தொடர்பு:* சிங்கப்பூர் பீடா, 174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் முன்பாக).
(10362) *T.P.: 0777-242416*

### பாண் விலை மாற்றம்

இன்று (07.11.2002) வியாழக்கிழமை தொடக்கம் 450 கிராம் நிறைகொண்ட பாணின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 15/= ஆகும் என்பதனை அங்கத்தவர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
(C/24739) யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.


## அழிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ 130 மி.மி. ஆட்லறி ஷெல் - 33
★ 120 மி.மி. மோட்டார் - 26
★ 82 மி.மி. மோட்டார் - 93
★ 81 மி.மி. மோட்டார் - 117
★ 60 மி.மி. மோட்டார் - 557
★ 40 மி.மி கிரனேட் - 12
★ ஆர்.பி.ஜி-(ஏபி) - 161
★ ஆர்.பி.ஜி-(ஏபி) - 71
★ கைக்குண்டுகள் - 108
★ கிளைமோர் குண்டுகள் - 07
★ டாங்கி எதிர்ப்பு கண்ணிகள் - 03
★ ரைபிள் கிரனேட் - 108
★ பெங்களூர் ரொபிடோ - 03
★ இலகு டாங்கி எதிர்ப்பு ஆயுதம் - 01
★ 37 மி.மி விமான எதிர்ப்பு ஆயுதம் - 02
★ 23மி.மி வெடிப்பொருள் - 01
★ பி.கே.881 வெடிப்பொருள் - 01
★ ஜொனி மிதிவெடி - 36
★ 120 மி.மி. மோட்டார் - 02
★ 82 மி.மி. மோட்டார் - 11
★ 81 மி.மி மோட்டார் செலுத்தி - 05 (ஐ)

## எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பேச்சுக்கள் நல்ல திசையில் முன்னேறும் என்ற எதிர்பார்ப்புக்களோடு வன்னியிலிருந்து புறப்பட்டோம். நாம் எதிர்பார்த்தபடி பல விடயங்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது; வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அவை நிறைவேறும் என்ற முழு நம்பிக்கையோடு தாய்லாந்தில் இருந்து திரும்புகின்றோம். அதற்கான சூழ்நிலை கனிந்து வருவதாகவே படுகின்றது" - என்றார் அவர். (ஐ-உ)

## டிசெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமரதுங்க கூறுகிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

டிசெம்பர் முதலாந்திகதி முதல ஜனவரி முதலாந்திகதி வரை மொரட்டுவை முதல் நீர்கொழும்பு வரையிலான பிரதேசத்தில் கொண்டாட்டங்கள் நடைபெறும் எனவும் அமைச்சர் அமரதுங்க தனது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

டிசெம்பர் முதலாந் திகதி கொழும்பு நகரை ஒளியேற்றும் நிகழ்ச்சியை பிரதமர் ஆரம்பித்து வைப்பார். அன்றுமுதல் கடைத் தெருக்கள், அரசாங்க நிறுவனங்கள், தனியார் கட்டடங்கள் யாவும் ஒளிமயமாக்கப்படும்.

டிசெம்பர் 7 ஆம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். 13,14,15 ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டியிலும் 20ஆம் திகதி ஹெவ்லொக் டவுண் பொலீஸ் மைதானத்திலும் கரோல் நிகழ்ச்சிகள் நடைபெறும். இவ்வாறே வேறு பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறும். டிசெம்பர் 31ஆம் திகதி காலிமுகத்திடலில் வாண வேடிக்கைகள் இடம்பெறும். (ஐ)

## பெருந்தொகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு அவற்றின் நடுவே வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

சர்வதேச மற்றும் உள்ளூர் செய்தியாளர்கள், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முதலில் அவற்றைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் பி.ப. 2.20 மணியளவில் ஷெல்கள், மோட்டார் ஷெல்கள் அடங்கிய வெடிபொருள்கள் வைக்கப்பட்டிருந்த முதலிரு குழிகளும் சுமார் 500 மீற்றர் தொலைவில் இருந்து வெடிக்கவைக்கப்பட்டன. பின்னர் ஏனைய குழிகளிலிருந்த வெடிபொருள்களும் வெடிக்க வைக்கப்பட்டன. பாரிய வெடியோசைகளால் அந்தப் பிரதேசம் அதிர்ந்தது. கரும்புகை மண்டலம் வானை நோக்கி மேலெழுந்தது.

3 ஆயிரத்து 702 ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் மற்றும் ஷெல்கள் உட்பட மொத்தம் 5 ஆயிரத்து 289 வெடிபொருள்கள் நேற்று அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பொறுப்பாளர் பி.யோகன், அட்பிரிவைச் சேர்ந்த பரணி, பிரிட்டனைச் சேர்ந்த கண்ணிவெடி ஆலோசனை ஏஜென்ஸிப் பொறுப்பாளர் டொன்மைக், நோர்வேயைச் சேர்ந்த நிபுணர் ரிச்சார்ட் மற்றும் யுனிசெவ் அதிகாரிகள் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (ஐ-3-8)

## வட்டி மீதான வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்.

★ பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான வாகனங்கள், கமத்தொழில் இயந்திரங்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கு அனுமதியில்லை. இது சூழலைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

★. துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அறவீடுகள் ஜனவரி முதலாம் திகதி முதல் 0.75 வீதத்திலிருந்து 0.5 வீதமாகக் குறைக்கப்படும்.

★ 7 கோடியே 20 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட வருடாந்த மொத்த விற்பனையை உடைய மதுபானங்களை விற்பனை செய்யும் நிலையங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் ஜனவரி முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

★ வெளிநாடுகளில் தொழில் செய்வோருக்குக் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட தீர்வையற்றபடி 1500 டொலர்களில் இருந்து 1750 டொலர்களாக 2003 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

★ 2003 ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு 50 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க வருமானத்துடனான கம்பனிகளின் கூட்டு வரி 30 வீதமாக குறைக்கப்படும்.

★ கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வருமான வரி விலக்களிப்பு, ஆண்டொன்றுக்கு 1,44,000 ரூபாவிலிருந்து 2,40,000 ரூபாவாக அதிகரிக்கப்படும் வரி விதிக்கத்தக்க பிரிவுகள் திருத்தப்படும்.

★ அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மீதான வரி விலக்குத் தொடரும். பிறவழிகள் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானம் மீது வரி அறவிடும் முறை மீள்பரிசீலனை செய்யப்படுகிறது. கலந்துரையாடல்களின் பின் 2003 ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து அது திருத்தப்படும்.

★ வங்கிகளும் பிற நிதிநிறுவனங்களும் 2003 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 10வீத 'வற்' வரிக்கு உட்படுத்தப்படும். ஆண்டொன்றுக்கு 18 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனவு துறைகள் 2003 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 10வீத 'வற்'வரிக்கு உட்படுத்தப்படும்.

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலி.வடக்கு, வலி.கிழக்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து பெரும் திரளான மக்கள் இப்பேரணியில் கலந்துகொள்ளவுள்ளதால் அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் -

அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் மக்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும் என்றும் - யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கு. சிறில் அறிவித்திருக்கிறார்.

வர்த்தக நிறுவனங்கள் பேரணி முடிவுற்றதும் தங்கள் வழமையான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


### வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு

போரூட் தம்பசிட்டி

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய 2003 ஆம் ஆண்டுக்கான

**G.A.Q., 1st in Com.**

வகுப்புக்களுக்கான விரிவுரைகள். நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 09.11.2002

(10325) நிர்வாகம்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் V.S.பரஞ்சோதி**
(பிரபல வர்த்தகர், சுன்னாகம்)

அப்பா! நீங்கள் சோதியாய் வாழ்ந்து
தீபத்துடன் ஜோதியாகி ஆண்டு ஒன்று
கடந்து விட்டது அப்பா! அப்பா என்று அரற்றும்
எங்கள் இதயங்கள் ஆறவில்லை.
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன ஆலமரமாய் நீங்கள் இருக்க
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்!
ஆலமரமும் சாய்ந்தது ஆனந்தமும் பறிபோனதே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (07.11.2002) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு:
அன்பு மகன
ஆறுமுகசோதி (சோதி)
மகள் ஜமுனா

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
(10321)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.